405

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ப்ரபந்நஜநாக்ரேஸரரான

ஸ்ரீ அழகியமணவாளப்பெருமாள் நாயனர்

திருவாய்மலர்ந்தருளிய

ஆசார்யஹ்ருதயம்

(பாசுரப்படி பிரமாணங்களுடன்)

OFFICE OF THE REGISTRAR
15 JAN 1938
MADRAS

காஞ்சிபுரம் தமிழ்ப்பண்டிதர்

T. C. பார்த்தசாரதி அய்யங்கார்

பார்வை.

பூமகள்விலாச அச்சுக்கூடம்

சென்னை

காபிரைட்] 1937 [விலை அணா 6

317
181·4859

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ப்ரபந்நஜநாக்ரேஸரரான

ஸ்ரீ அழகிய மணவாளப்பெருமாள் நாயனர்

திருவாய்மலர்ந்தருளிய

ஆசார்ய ஹ்ருதயம்

(இதற்குப் பாசுரப்படி பிரமாணங்களும்)

காஞ்சிபுரம் தமிழ்ப்பண்டிதர்

T. C. பார்த்தசாரதி அய்யங்கார்

பார்வையிட்டது.

OFFICE OF THE REGISTRAR
15 JAN 1938
MADRAS

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1937

இதன் விலை] Copy Right. [அணு 6

ஸ்ரீ

அவதாரிகை

ஸ்ரீய:பதியாய், ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரன், நிரதிஶயானந்தமயமான ஸ்ரீ வைகுண்டத்திலே, நித்ய நிர்மல ஜ்ஞாநாதி குணகராய் ஸ்வச்சந்தா நுவ்ருத்தி ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ர்த்தி பேதரான நித்யஸூரிகளாலே அநவரத பரிசர்யமான சரண நளினனாய்க்கொண்டு எழுந்தருளி யிராநிற்க, லீலாவிபூதியிலுள்ளார் அவர்களோபாதி தன்னை யநுபவிக்க ப்ராப்தி யுண்டாயிருக்க இழந்து கிடக்கிறபடியைக் கண்டு, அதிவ்யாகுலனாய் இவர்களை யுஜ்ஜீவிப்பிக்கையி லுண்டான நஶையாலே “அசித விஶேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத: கரணகளேபரைர்க் கடயிதும் தயமாநமநா:” என்கிறபடியே கரணகளேபர விதுரராய் அசித விஶேஷிதராய் அத ஏவ போகமோக்ஷ ஶூந்யராய் கிடக்கிற தஶையிலே தயமாந மநாவாய்க்கொண்டு ஸ்வசரண கமல ஸமாஶ்ரயணோபகரணமான கரணகளேபரங்களைக் கொடுத்து ஜ்ஞாந விகாஸத்தையும் ப்ரவ்ர்த்தி நிவ்ர்த்தி ஶக்தியையும் உண்டாக்கி இந்த ஜ்ஞான கார்யமான த்யாஜ்யோபாதேய விவேக பரிகரமாக “மாநம் ப்ரதீப மிவகாருணிகோ ததாதி” என்கிறபடியே வேதப்ரதாநத்தைப்பண்ணி அநந்தரம் மந்வாதிகளுக்கு அந்தர்யாமியாய் நின்று சேதனருடைய விசிஷ்டவேஷ விஷயமான ஶாஸ்த்ரத்தை வெளியிட்டருளி அந்த ஶாஸ்த்ராப்யாஸம் அநேக யோக்யதா ஸாபேக்ஷமாய் சிரகால ஸாத்யமுமா யிருக்கையாலே துஷ்கரமா யிருக்கிறபடியைத் திருவுள்ளம்பற்றி தாத்ருஶ யோக்யதா நிரபேக்ஷத்வாதிகளாலே ஸுகரமுமாய் சேதந நிஷ்க்ருஷ்ட வேஷ விஷயமான திருவஷ்டாக்ஷர ப்ரஹ்ம வித்யையை ஸ்வயமேவ வெளிப்படுத்தின வளவிலும், கார்யகரமாகாமையாலே ஓலைப்புறத்திற் செல்லாத ராஜ்யத்தை

எடுத்துவிட்டுச் செலுத்துக் கொள்ளும் ராஜாக்களைப்போலே நாமே சென்று திருத்தக் கடவோம் என்று ராமக்ருஷ்ணாத் யவதாரமுகேந இவர்களிருக்கிற விடத்திலே தான் வந்து திருத்தப் பார்த்தவிடத்திலும் ஒருவரும் திருந்தக் காணாமை யாலே விஜாதீயரான நம்மால் ஒருபடியாலும் இவர்களைத் திருத்தப் போகாததா யிருந்தது. இனி இணக்குப் பார்வை யிட்டு ம்ருகம் பிடிப்பாரைப்போலே ஸஜாதீயரைக் கொண்டே கார்யங் கொள்வோமென்று அறுதியிட்டு அதுக்கு ஆமுதல் வரை யுண்டாக்குகைக்காக ஸர்வபூத ஸுஹ்ருத்தான தன் னுடைய நிர்ஹேதுக ப்ரஸாதத்தாலே எங்கும் பார்த்து இலக்குக் காணாமல் வாராநிற்க, அந்தப் பார்வை தனக்குப் பள்ளமடையான தென்திசையிலே யானவளவிலே “மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து” என்கிறபடியே ஜன்ம பரம் பரைகளிலே தோள்மாறி நித்ய ஸம்ஸாரியாய்ப் போருகிற விவர்மேலேபட, அந்த நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷ லப்த திவ்யஜ்ஞாந பக்திகரான ஆழ்வார் தத்ஸ்வரூப ரூபகுண விபூதி களை விசத விசததர விசததமமாக அநுபவித்து அவ்வநு பவ பரீவாஹ ரூபேண பேசுகிற பாசுரமானது சோக வேக ஜநிதமான “மாநிஷாதேத்யாதி” ஶ்லோகம் ப்ரஹ்மாவின் ப்ர ஸாதத்தாலே லக்ஷணோபேத மானாப்போலே பகவத் ப்ரஸாத மடியாக ஸர்வ லக்ஷணோ பேதமான ப்ரபந்தமாய்த் தலைக் கட்டிற்று. இதுதானும் த்ராவிட வேததயா விஸ்தீர்ணமாய் அநேகார்த்த ப்ரதிபாதகமா யிருக்கையாலே இதில் தாத்பர் யார்த்தம் ஸர்வர்க்கும் ப்ரதிபத்தி விஷயமாகை அறிதென்று பார்த்து இதிலர்த்த விசேஷங்களையும் இவற்றில் ஆழ்வார் திருவுள்ளக் கருத்தின் ப்ரகாரத்தையும் இவ்வாசார்ய ருசி பரிக்ருஹீதமான வர்த்தமே எல்லார்க்கும் தஞ்சமென்னு மத்தையும், இவர் தம்முடைய பரம க்ருபையினாலே ப்ரகாசிப் பியா நின்றுகொண்டு ஆசார்ய பரம்பரா ப்ராப்தமான இவ் வர்த்தங்கள் எல்லார்க்கும் ப்ரதிபத்தி யோக்யமாம்படி அநதி ஸங்க்ரஹாதி விஸ்தாரமாக இவ்வாசார்ய ஹ்ருதய ப்ரபந்த முகேந அருளிச்செய்கிறார். “ஆத்யஸ்யந: குலபதே:” என்

கிறபடியே வைதிக ஸந்தாநத்துக்கு ப்ரதமாசார்யரான ஆழ்வார் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களில் அவருடைய திருவுள்ளக் கருத்துகளைச் சொல்லுகையாலேயிறே இப் பிரபந்தத்துக்கு ஆசார்ய ஹ்ருதயம் என்று நிரூபகமாயித்து. இப் ப்ரபந்தந்தில் இவர் அருளிச்செய்கிற வாக்யங்களெல்லாம் அருளிச்செயல் சந்தைகளைச் சேர்த்து அருளிச்செய்கிறது. மயர்வற மதிநல மருளப் பெற்றவர்கள் பேசின திவ்ய ஸூக்திக ளாகையாலே ஆப்ததமமுமாய் அத்யந்த போக்யமுமாயிருக்கிற விதுவே தமக்கு அநவரதாபிமத மாகையாலும் முகமறிந் தவன் கோர்த்தமுத்து பெருவிலையனுமாப்போலே சந்தைகளைத் தாம் சேர்த்த சாதுரியாலே அருளிச்செயலில் ரஸஜ்ஞர்க்கு இதிலர்த்தத்திலும் காட்டில் சப்தந்தானே மிகவும் இனியதா யிருக்குமென்றும் அபிப்ராயத்தாலும், ஆகையால் இப்பிரபந் தம் ஶப்தார்த்தங்கள் இரண்டின் ரஸத்தாலும் விசேஷஜ்ஞஜந மனோஹரமா யிருக்கும். இதில் முதல் சூர்ணையாலே "ஹார்த் தும் தமஸ்ஸதஸ தீச விவேக்து மீஶோ மாநம்ப்ரதீபமிவ காருணி கோததாதி" என்கிறபடியே ஆகஸ்மிக க்ருபாவானுன ஸர்வேஸ்வரன், அஜ்ஞான ஸம்ஸாரி சேதனர்க்கு ஸதஸத் விவேக பரிகரமான சாஸ்த்ர ப்ரதாநத்தைப்பண்ணி யருளின படியை அருளிச்செய்கிறுர்.

அவதாரிகை முற்றிற்று.



15 JAN 1939

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆசார்ய ஹ்ருதயம்

தனியன்கள்

ஆசார்யஸ்வாந்தவக்தார மபிராமவராபிதம்
ஸ்ரீக்ருஷ்ணதநயம் வந்தே ஜகத்குருவராநுஜம்.

மணவாளரவணைப்பள்ளி பயில்பவர்க்கெவ்வுயிரும்
குணபோகமென்றுகுருகைக் கதிபனுரைத்ததுய்ய
உணர்பாவினுட்பொருளென்றுமறியாவுலகறிய
மணவாளன்மாறன்மன முரைத்தான்வண்முடும்பைவந்தே.

மாதவத்தேர்ன்மாறன் மநம்கூறுமணவாளன் [ஞ
தோதவத்தித்தூய்மறையோரானபெற்றார் - நீதியி
லாங்கவர்தாள்சேர்பெற்றா ராய்மணவாளமுனிப்
பூங்கமலத்தாள்கள் நெஞ்சேபோற்று.

ப்ரதம ப்ரகரணம்

1 காருணிகனான ஸர்வேஸ்வரன் அறிவிலா மனிஸர் உணவெனும் ஸுடர்விளக்கேற்றி பிறங்கிருள் நீங்கி மேலிருந்தநந்தா வேதவிளக்கைக் கண்டு நல்லதுந் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய்விரிந்த் துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினாலருள்செய்தான்.

2 விவேகபலம் வீடுபற்று.

3 த்யாஜ்யோபாதேயங்கள் ஸுகதுக்கங்கள்.

4 இவைத்துக்கெல்லை இன்புதுன்பளிப்பன் மாமாயத் தழுந்துகையுங் களிப்புங் கவர்வுமற்று பேரின்பத் தின்புறுகையும்.

5 அநந்தக்லேச நிரதிசயாநந்தஹேது மறந்தேனறியகிலாதே உணர்விலே னேணிலே னயர்த்தென்னும், உய்யும்வகை நின்றவொன்றை நன்கறிந்தனன் உணர்வினுள்ளே ஆம்பரிசென்றுஞ் சொல்லுகிற ஜ்ஞாதவ்ய பஞ்சக ஜ்ஞாநா ஜ்ஞானங்கள்.

6 இவைத்துக்குக் காரணம் இரண்டிலொன்றில் ஒன்றுகைகள்.

7 ஸத்வாஸத்வ நிதாநம் இருள்தரும் அமலங்களாக வென்றும் ஜன்ம ஜாயமாநகால கடாக்ஷங்கள்.

8 இவைத்துக்கு மூலம் இருவல்லருள் நல்வினைகள்.

9 கர்மக்ருபா பீஜம் பொய்நின்ற அருள்புரிந்தவென்கிற அவித்யா ஸௌஹார்தங்கள். ஏதந்நிமித்தம்.

10 முன்னமே முதல் முன்னமேயான அசிதயநாநாதி ஸம்பந்தங்கள்.

11 இவை கிட்டமும் வேட்டு வேளானும் போலே ஒண்பொருள் பொருளல்லாதீவை யென்னுதே நானிலாதயானும் உளஞ்வனென்கிற ஸாம்

யம்பெறத் தின்றாதி அந்தமும் வாழ்வுமாகிற ஹா நிஸத்தைகளை யுண்டாக்கும்.

12 ஒன்றுகூடினதாய் பற்றறுக்க மீண்டொழி கையாலே பழவடியேனென்று மதொன்றுமே யொழிக்க வொழியாதது.

13 இந்த உதிரத்தறிப்பு த்ரைகுண்ய விஷய மானவற்றுக்கு ப்ரகாஶகம்.

14 வத்சலையானமாதா பிள்ளைபெகணியாமல் மண்தின்றவிட்டு ப்ரத்யௌஷத மிடுமாப்போலே எவ்வுயிற்கும் தாயிருக்கும் வண்ணமான விவனும் ருசிக்கீடாகப்பந்தமும் பந்தமறுப்பதோர் மருந்துங் காட்டுமிறே.

15 •அதுதானும் ஆஸ்திக்யம் விவேகம் அந் யஶேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ரிய நிவ்ருத்தி பாரதந் த்ர்யங்களை யுண்டாக்கினவழி.

16 சதுர்விதமான தேஹவர்ணாஶ்ரமாதிகார பலமோக்ஷஸாதன கதி யுக தர்ம வ்யூஹ ரூப க்ரி யாதிகளை அறிவிக்கிற பாட்டுப்பறப்புக்கு பெரிய தீவினில் ஒன்பதாங்கூறும் மானிடப்பிறவியும் ஆக்கைநிலையும் ஈரிரண்டிலொன்றும் இளமையு மிசைவுமுண்டாய்ப் புகுவரேலு மென்கிறதற் குள்ளே விக்நமற நின்றவாநில்லா ப்ரமாதியைக் கொண்டு அறக்கற்கை யறிதென்றிறே வேதஸா ரோபநிஷத் ஸாரதரா நுவாக ஸாரதம காயத்ரியில் முதலோதுகிற . பொருள்முடிவான சுருக்கை தைவவண்டாய் அன்னமாய் அமுதங்கொண்ட

வன் ஶாகைகளிலும் ஓதம்போல் கிளர் நால்வேதக் கடலிலும் தேனும்பாலு மமுதுமாக வெடுத்துப் பெருவிசும்பருளும் பேரருளாலே சிங்காமை விரித்தது.

17 முநிவரை யிடுக்கியும் முந்நீர்வண்ணனை யும் வெளியிட்டஶாஸ்த்ர தாத்பர்யங்களுக்கு விஶி ஷ்ட நிஷ்க்ருஷ்ட வேஷங்கள்விஷயம்.

18 தோல்புரையே போமதுக்கு பழுதிலா யோக்யதை வேணும்; மனமுடையீ ரென்கிற ஶ்ரத்தையே அமைந்த மர்ம ஸ்பர்சிக்கி நானும் நமருமென்றும்படி ஸர்வருமதிகாரிகள்.

19 ஶாஸ்த்ரிகள் தெப்பக் கையரைப்போலே இரண்டையு மிடுக்கி பிறவிக்கடலை நீந்த ஸாரஜ் ஞர் விட்டத்தி லிருப்பாரைப்போலே இருகையும் விட்டு கரைகுறுகுங்காலமெண் ணுவர்கள்.

20 இவை ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந் துணரவும் உணர்வைப் பெறஊர மிகவுணர்வு முண்டாம்.

21 ஶேஷத்வ போக்த்ர்த்வங்கள் போலன்றே பாரதந்த்ர்ய போக்யதைகள்.

22 ஜ்ஞாந சதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்த ஷஷ்டிகளுக்குதயம்.

23 முளைத்தெழுந்த ஸூர்ய துல்ய யாதாத்ம்ய சரமம் விதியில்காணும் ப்ரதம மத்யமதசைகளை பகல்விளக்கும் மின்மினியு மாக்கும்.

24 நாலிலொன்று ப்ரவர்த்தகம்; ஒன்று நிவர்த்தகம்.

25 முற்பாடர்க்கு க்ரியாங்கமானவை இரண்டும் செயல்தீர்ந்தார் வ்ருத்தியில் ஸ்வநிர்ப்பந்த மறுக்கும்.

26 கர்மகைங்கர்யங்கள் ஸத்யாஸத்ய நித்யாநித்ய வர்ணதாஸ்யாநுகுணங்கள்.

27 இவற்றுக்கு விதிராகங்கள் ப்ரேரகங்கள்.

28 மண்டினாரும் மற்றையாரு மாஸ்ரயம்.

29 அருள்முடிய நிறுத்தி அடைய நின்றதும் நல்லதோரருள் தன்னாலே நன்றுமெளியனாகிறதும் விஷயம்.

30 இவற்றாலே ஸாதாரண மஸாதாரணமென்னும்.

31 ஜாத்யாஸ்ரம தீக்ஷைகளில் பேதிக்கும் தர்மங்கள்போலே அத்தாணிச் சேவகத்தில் பொதுவானது நழுவும்.

32 ஸாதந ஸாத்யங்களில் முதலும் முடிவும் வர்ணதர்மிகள் தாஸவ்ருத்திக ளென்று துறை வேறிடுவித்தது.

33 வேதவித்துக்களும் மிக்கவேதியரும் சந்தஸாம் மாதாவாலும் அதுக்கும் தாயாய் தாயினுமாயின செய்யுமத்தாலும் பிறப்பிக்குமது இருவர்க்கும் ஸ்ரேஷ்ட ஜந்மம்.

34 அந்தணர் மறையோரென்றும் அடியார் தொண்டரென்றும் இவர்களுக்கு நிருபகம்.

35 ஒருதலையில் க்ராம குலா திவ்யபதேஶம் குலந்தருமென்றும், மாசில் குடிப்பழியென்றும் பதியாகக்கோயில் வாழும் என்பர்கள்.

36 விப்ரர்க்கு கோத்ர ஸூத்ர சரண கூடஸ்தர் பராஶர பாராஶர்ய போதாயநாதிகள் ப்ரபந்த ஜநகூடஸ்தர் பராங்குஶ பரகால யதிவராதிகள்.

37 அத்யயந ஜ்ஞாநானுஷ்டாநங்களாலே ப்ராம்ஹண்ய மாகிறுப்போலே சந்தங்களாயிரமும் அறியக்கற்று வல்லரானல் வைஷ்ணவத்வஸித்தி.

38 இந்த உட்பொருள் கற்றுணர்ந்து மேலைத்தலைமறையோர் ஆகாதாரை அயர்ச்சதுப் பேதிமாரென்று உத்பத்தி நிரூபிக்கும்.

39 எவ்வுலகத் தெவ்வெவையும் என்கையாலே வேதம் பஹுவிதம்.

40 இதில் ஸம்ஸ்க்ருதம் த்ராவிடமென்கிற பிரிவு ருகாதி பேதம்போலே.

41 செந்திறத்த தமிழென்கையாலே ஆகஸ்த்யமுமநாதி.

42 வடமொழி மறையென்றது தென்மொழி மறையை நினைத்திறே.

43 வேதசதுஷ்டயாங்கோ பாங்கங்கள் பதினலும்போலே இந்நாலுக்கு மிருந்தமிழ் நூல் புலவர் பனுவலாறும், மற்றையெண்மர் நன்மாலைகளும்.

44 ஸகல வித்தியாதிக வேதம்போலே இதுவும் திவ்யப்ரபந்த ப்ரதாநம்.

45 வேதநூல், இருந்தமிழ்நூல், ஆஜ்ஞை ஆணை, வசையில் ஏதமில் ஸ்ருதி செவிக்கினிய ஓதுகின்றதுண்மை பொய்யில் பாடல் பண்டை நிற்கும் முந்தை யழிவில்லா என்னும் லக்ஷணங்க ளொக்கும்.

46 சொல்லப்பட்ட வென்னவிதில் கர்த்ருத் வம் ஸ்ம்ருதியத்தை ஸ்வயம்பூ படைத்தா னென் னதுபோலே.

47 நால்வேதம்கண்ட புராணருஷி மந்த்ர தர்ஸிகளைப்போலே இவரையும் ருஷி முநி கவி யென்னும்.

48 படைத்தான் கவியென்னபோதே இது வும் யதாபூர்வ கல்பநமாமே.

49 உறக்கம் தலைக்கொண்ட பின்னை மறை நான்கு முணர்ந்த தங்களப்பனோடே ஓதின சந்தச் சதுமுகன் சலங்கலந்த வெண்புரிநூல் மானுரி திரிதந்துண்ணும் காமனுடல் இருக்கிலங்கு ஜ்யேஷ்ட புத்ராதிகளுக்கு மறைபயந்தாப்போலே ஆதுமில்காலத் தெந்தையான வாய்முதலப்பன் பிரமகுருவாய் இராப்பகல் முன்சொல்ல, கற்ற னமே யென்றவிவரும் நாவினுல் நன்மையா லென்று ஓதவல்லபிராக்களை கன்மிங்களென்று சொற்பயிற்ற, வேதமோதுவாரோத்தாகையாலே ஆதர்வணுதிகள்போலே இதுவும் பேர்பெற்றது.

50 இயற்பா மூன்றும் வேதத்ரயம்போலே பண்ணார் ப்பாடல் பண்புரை யிசைகொள் வேதம் போலே.

51 ருக்கு ஸாமத்தாலே ஸரஸமாய் ஸ்தோபத்தாலே பரம்புமாப்போலே சொல்லார் தொடையல் இசைகூட்ட அமர்சுவை யாயிரமாயிற்று.

52 சந்தோகனென்று ஸாமாந்யமாகாமல் முதலிலே பிரித்து யாழ்பயில் காநஸ்வரூபியை பாலையாகியென்று, விசேஷிக்கையாலே வேதகீதச் சாமி நானென்ன ஸாமம் தோற்ற உத்கீத ப்ரணவத்தை ப்ரதமத்திலே மாருடி சரமகதி முடிவாக தொண்டர்க்கமுதென்ன தேவாந்நமாக்கி மஹா கோஷ நல்வேத வொலிபோலே மஹாத்யயன மென்னப் பாடுகையாலே இத்தைச் சாந்தோக்ய ஸமமென்பர்கள்.

53 புரவியேழொருகாலுடைய தேரிலே திருச்சக்கரமொற்று காலசக்கரச் செங்கோல் நடாவி ஜ்யோதிஶ்சக்ர ஒளிசுருக்கி அக்நீஷோமீய தேஜோம்ருதத்துக் கூற்றும், மந்தேகர்க்குச் செந்தீயும் முக்திமார்க்கத் தலைவாசலும் கண்ணவான் கண்ணிற்பிறந்த கண்மணியும் த்ரயீமயமுமான மண்டலத்திலே தண்டாமரை சுமக்க தோள்வளையுங் குழையும் திருச்செய்ய முடியும் ஆரமும் படையும் திகழும் பொன்மேனியும் செஞ்சுடர்த்தாமரைக்கண்ணுமாய் அணிநிறமும் மூர்த்தியீதென்னும்படி இரண்டையும் தன்னிறமாக்குகிற செய்யாளான வித்யையோடே அருக்கன்மேவின ஸதாத்யேய தேஜஸ்ஸீன் ஸாம ரஹோஸ்யாத்காந நாமமுள்ளுறையான ஆத்யந்தங்களாலே ஓராயிர மாமவற்றிலே ஒன்றை ஆயிரமுக்த்திலுலருளின

தீர்த்தம்போலே தீர்த்தங்களாயிரமுமாக விஸ்தரிக்கிறுரென்று வேத குருபதேஸம்.

54 அன்றிக்கே ஸ்வரூப குண விபூதி சேஷ்டிதங்களை விசதமாக்குகிற பஞ்சராத்ர புராணேதிஹாஸங்கள்போலே நீலபாருபோக்தி தெரியச் சொன்ன வேதோபப்ரும்ஹணமென்பர்கள்.

55 கல்பாதியில் தோற்றித்து வர்ணிக்கும் சதுர்முகன் சந்தஸ்ஸும் மோஹஸாஸ்த்ர ப்ரவர்தகன் பிணச்சுடலே வெந்தாரக்குமாறு மணிந்து ஏறேறிச் சுழன்ருடும் ஆலமர் பிச்சுத்தெளிந்து தான்வணங்குமாறுரைக்கக் கேட்ட ஸஜாதீயர் ப்ரஸாதமும் ஆர்ஷமூலம்.

56 பரமஸத்வத்தோடே உள்ளியுரைக்கும் நிறைஞானத்தயனும் சிவனுந் திருமாலாலருள் கொண்டு இவர் பாடினர்.

57 கருவுள்வேறிலாமையரனயனெனச்செய்யுமவைபோலே மூவுருவாமுதல்வன் துப்பரவாலே பரமகவிகளால் பாடுவியாது நேர்படச்சொல்லும் நீர்மையிலா வென்னைத் தன்னுக்கியென்ன முதல் வந்து புகுந்து தப்புதலறத் தன்னை வைகுந்தனுகத் தன் சொல்லால் தானேதுதித்து மலக்குநாவியல் மொய்ய சொல்லால் சொல்லவல்லேனென்று நானும் சொல்லி நாடுங்கையெடுக்கும்படி என் சொல்லால் யான்சொன்ன இன்கவி யென்பித்தானென்ருரிறே.

58 தர்மவீர்ய ஜ்ஞாநத்தாலே தெளிந்து ஹ்ருஷ்டராய் மேலேமேலே தொடுப்பாரைப்போ

லன்றே அருளினபக்தியாலே யுள்கலங்கிச் சோகித்து மூவாறுமாசம் மோஹித்து வருந்தி யேங்கித் தாழ்ந்த சொற்களாலே நாற்கிறவிவர்.

59 ஸ்வாத்யாய யோகங்களைக் கற்றுந் தெளிந்துங் கண்டமைப்பாலே ஓதியுணர்ந்தவர் இன்ன மாஶாபாஶபத்தர்; அவன் வழங்கும் திவ்யசக்ஷுஸ்ஸாலே நேரே கார்செறிந்த நீராடி கட்கரிய வரும் பொருளைக் கண்டபோதே யாமுருமை யென்னும்படி யிவர்க்கு வன்பாஶங்கள் நீங்கிற்று.

60 அவர்களுக்கு காயோடென்னுமவையே தாரகாதிகள்; இவர்க்கெல்லாங் கண்ணனிறே.

61 அழுநீர் துளும்பக் கடலு மலையும் விசும்பு ந்துழாய் திருமாலென்றும் எங்கே காண்கேன் என்று மிவரலமாப்பு அவர்களுக்குப் புத்ரவியோகத்திலே.

62 பலஸாதந தேவதாந்தரங்களில் இவர்கள் நினைவு பேச்சிலே தோன்றும்.

63 ராமாயணம் நாராயணகதை யென்று தொடங்கி கங்கா காங்கேய ஸம்பவாத் யஸத்கீர்த்தநம் பண்ணின எச்சில்வாய் ஶுத்தி பண்ணுமல் திருமாலவன் கவியென்ன வாயோலைப்படியே மாற்றங்களாய்ந்துகொண்டு உரியசொல் வாய்த்த வித்து வேதாதிகளில் பௌருஷமான கீதாவைஷ்ணவங்கள்போலே அருளிச்செயலில் ஸாரம்.

64 குருசிஷ்ய க்ரந்த விரோதங்களை பரமதாதிகளாலே பரிஹரியாமல் செஞ்சொல் செந்தமி

ழின்கவி பரவியழைக்குமென்று அந்யோந்யங் கொண்டாடி பேசிற்றே பேசுமேககண்டரில் என் னின் மிகுவென்று மிவருரைகொளின் மொழி கொண்டு ஶாஸ்த்ரார்த்தங்கள் நிர்ணயிக்கவேண்டு கையாலே வலங்கொண்ட விதுக்குச் சேராதவை மனுவிபரீதங்கள்போலே.

65 பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக் யங்கள் ஒருங்கவிடுவர்.

66 அதுக்கு மூலம் "விதயஶ்ச" என்கிற பர மாசார்யவசநம்.

67 ஆப்திக்கு இவர் சுருதி மார்க்கண்டேயன் பார்த்தனென்கிறவிவை வ்யாஸ மநு ப்ரும்ஹவா திகளை வேதம் சொல்லுமாப்போலே.

68 பாரத கீதைகளின் வேதோபநிஷத்வம் போலே இதுவும் வ்யாக்யையாலும் வேத ரஹஸ்யமாம்.

69 உதாத்தாதி பதக்ரம ஜடாவாக்ய பஞ்ஜாதி பாத வ்ருத்த ப்ரஶ்ந காண்டாஷ்ட காத்யாயாம்ஶ பர்வாத்யலங்காரங்கள் போலே எழுத் தசை சீர் பந்த மடி தொடை நிரை நிரையோசை தளை யினம் யாப்பு பாத்துறை பண் இசை தாளம் பத்து நூருயிரம் முதலான செய்கோலம் இதுக்குமுண்டு.

70 அதவாவேத வேத்யந்யாயத்தாலே பரத் வபரம் முதுவேதம் வ்யூஹ வ்யாப்த்யவதரணங்க ளில் ஓதின நீதிகேட்ட மனுபடுகதைகளாய் ஆக

மூர்த்தியிற்பண்ணிய தமிழானவாறே வேதத்தை த்ராவிடமாகச் செய்தாரென்றும்.

71 மண்ணுடின ஸஹஸ்யஜலம் தோதவத்திச் சங்கணித்துறையிலே துகில்வண்ணத் தெண்ணீராய் அந்தஸ்தத்தைக் காட்டுமாப்போலே அல்பஶ்ருதர்கலக்கின ஶ்ருதி நன்ஞானத்துறைசேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை யறிவித்தது.

72 மேகம்பருகின ஸமுத்ராம்புபோலே நாற்கடல் சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோபஜீவ்யமாமே.

73 ம்ருத்கடம்போலன்றே பொற்குடம்.

74 பெரும்புறக்கடலும் ஶ்ருதி ஸாகரமும் அலைத்து ஆழ்ந்து ஓடுமிடங்களில் அயோக்யர்க்குச் சமைத்த மடுவுஞ்சாய்கரகமும் மாநமேயசரமம்.

75 வீட்டின்ப வின்பப் பாக்களில் த்ரவ்ய பாஷா நிரூபண ஸமம் இன்பமாரியிலாராய்ச்சி.

76 பேச்சு பார்க்கில் கள்ளப்பொய்ந் நூல்களும் க்ராஹ்யங்கள் பிறவிபார்க்கில் அஞ்ஜாமோத்தும் ஆறுமூன்றுங் கழிப்பனும்.

77 க்ருஷ்ண க்ருஷ்ணத்வைபாயனுதைத் பத்திகள் போலன்றே க்ருஷ்ண த்ருஷ்ண தத்வஜந்மம்.

78 பெற்றும் பேறிழந்தும் கன்னிகையானவளும் எல்லாம் பெற்றுளாயுந் தத்துக்கொண்டாளென்பர் நின்றுரென்னுமவளும் நெடுங்காலமும் நங்கைமீரென்னு மிவருக்கு நேரன்றே.

79 மீன நவநீதங்கள் கந்திக்குமிடமும் வெறி கொள் துழாய் கமழுமிடமும் தன்னிலொக்குமோ.

80 ஆற்றில் துறையில் ஊரிலுள்ள வைஷம்யம் வாசாம கோசரம்.

81 தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள்போலே ப்ரம்ஹஜந்மமும் இழுக்கென்பார்க்கு பண்டைநாளில் பிறவியுண்ணுட்டுத் தேசிறே.

82 ஜநக தஶரத வஸுதேவ குலங்களுக்கு மூத்த பெண்ணும் நடுவில் பிள்ளையும் கடைக்குட்டியும்போலே யிவரும் பிறந்து புகழுமாக்கமுமாக்கி யஞ்சிறையுமறுத்தார்.

83 ஆதித்ய ராமதிவாகராச்யுத பாநுக்களுக்குப் போகாத வுள்ளிருள் நீங்கி சோஷியாத பிறவிக்கடல் வற்றி விகஸியாதபோதில் கமலமலர்ந்தது வகுளபூஷணபாஸ்கரோதயத்திலே.

84 வம்சபூமிகளை யுத்தரிக்கக் கீழ்க்குலம்புக்க வராஹ கோபாலரைப்போலே யிவரும் நிமக்நரை யுயர்த்தத் தாழவிழிந்தார்.

85 ம்லேச்சனும் பக்தனுனல் சதுர்வேதிகளநுவர்த்திக்க அறிவுகொடுத்துக்குலதெய்வத்தோடொக்கப் பூஜைகொண்டு பாவனதீர்த்த ப்ரஸாதனுமென்கிற திருமுகப்படியும், விஶ்வாமித்ர விஷ்ணுசித்த துளஸீப்ருத்யரோடே உள்கலந்து தொழுகுலமானவன் நிலையார்பாடலாலே ப்ராம்ஹணவேள்விக்குறை முடித்தமையும் கீழ்மகன் தலைமக

னுக்கு ஸமஸகாவாய் தம்பிக்கு முன்பிறந்து வேலும் வில்லுங்கொண்டு பின்பிறந்தாரைச் சோதித்துத் தமயனுக்கு இளையோன் ஸத்பாவம் சொல்லும்படி யேககுலமானமையும், தூதுமொழிந்து நடந்துவந்தவர்களுடைய ஸம்யக் ஸகுண ஸஹபோஜநமும் ஒரு பிறவியிலே இருபிறவியானு ரிருவர்க்குத் தர்மஸூநுஸ்வாமிகள் அக்ரபூஜை கொடுத்தமையும் ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் ஸந்தேஹியாமல் ஸஹஜரோடே புரோடாசமாகச் செய்த புத்ரக்ருத்யமும் புஷ்பத்யாக போகமண்டபங்களில் பணிப்பூவும் ஆலவட்டமும் வீணையுங் கையுமான அந்தரங்கரை முடிமன்னனும் வைதிகோத்தமரும் மஹாமுனியும் அநுவர்த்தித்த க்ரமமும்; யாகாநுயாகோத்தர வீதிகளில் காயாந்த ஸ்தல சுத்திபண்ணின வ்ருத்தாசாரம் அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாப கர்ஷங்கள் தெரிவது.

86 அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணாஶ்ரம வித்யா வ்ருத்தங்களை கர்த்தபஜந்மம் ஶ்வபசாதமம் சில்ப நைபுணம் பஸ்மாஹூதி ஶவ விதவாலங்காரமென்று கழிப்பர்கள்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் திருவடிகளே சரணம்.

ப்ரதமப்ரகரணம் ஸம்பூர்ணம்.

த்விதீயப்ரகரணம்

87 அணையவூரப்புனைய அடியும் பொடியும் பட பர்வத பவநங்களிலே ஏதேனுமாக ஜநிக்கப் பெறுகிற திர்யக் ஸ்தாவர ஜந்மங்களைப் பெருமக்களும் பெரியோரும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப்பர்கள்.

88 ஶேஷத்வ பஹிர்ப்பூத ஜ்ஞாநாநந்தமயனையும் ஸஹியாதார் த்யாஜ்யோபாதியை யாதரியார்களே.

89 இதின் ஔபாதிகத்வம் ஒருராஜாதன்னை மறைமுனிவனுக்கினவன் நீசனுக்கிவைத்த ராஜாவை வாரே உறுப்பாக யஜிப்பித்து ஸ்வர்க்கமேற்றினபோதே தெரியும்.

90 மாவுருவில் கள்ளவேடம் திருந்த வேத மலமான மாணிடம்பாடல், ஸர்வவர்ண சூத்ரத்வம், காடுவாழ்சாதியில் கடல் வண்ணன் வேடம், தென்னுரையில் ஹரிகீர்த்தி, ஸ்வபசரில் பத்திபாரநமும் அறிவார். ஆரார் அமரரென்ன வேற அறியாதார் சாதியந்தணர்களேலும் தகரவிழுவர்.

91 தமிழ் மாமுனி திக்குச்சரண்ய மென்றவர்களாலே க்வசித்க்வசித்தென்று இவராவிர்ப்பாவங் கலியுங் கெடும்போலே ஸூசிதம்.

92 அத்ரி ஜமதக்நி பங்திரத வஸு நந்த ஸூநு வானவனுடைய யுகவர்ணக்ர மாவதா

ரமோ வ்யாஸாதிவதாவேஸமோ மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே யொருவரோ? முன்னம்நோற்ற அநந்தன்மேல் புண்ணியங்கள் பலித்தவரோ வென்றும் சங்கிப்பர்கள்.

93 இதுக்கு மூலம் யான் நீயென்று மறுதலைத்து வானத்து மண்மிசை மாறும் நிகருமின்றி நிலையிடந்தெரியாதே தெய்வத்தின மொருவகைக்கொப்பாக இனத்தலைவ னந்தாமத் தன்புசெய்யச் சேர்ந்தமைக்கடையாள முளவாக உகந்துகந்து திமிர்கொண்டா லொத்து நாட்டியல் வொழிந்து சடரையோட்டி மதாவலிப்தர்க்கு அங்குசமிட்டு நடாவிய கூற்றமாய் தீயனமருங்கு வாராமல் கலியுகம் நீங்கிக் கிதயுகம்பற்றி பட்டெழுபோதறியா திருந்த ப்ரபாவம்.

94 இதுக்கு ஹேது ஊழிதோறும் சோம்பாது ஒன்றிப் பொருளென்று அளிமகிழ்ந்து முற்றுமாய் நின்று நாலுரைத்து யோகுபுணர்ந்து கண்காணவந்து ஆள்பார்க்கிறவன் உலகினதியல்வை நல்வீடுசெய்யும் இணக்குப்பார்வைதேடி கழறலஞான முருவின முழுதுமோட்டின பெருங்கண் எங்குமிலக்கற்று அன்போடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப்படிந்து துளங்குகிறவர் மேலேபட பக்கம்நோக்கறப்பண்ணின விசேஷகடாக்ஷம்.

95 ஸ்ரமணிவிதுர ருஷிபத்நிகளை பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்குச் சாபம் இழந்தென்னப் பண்ணுமிறே.

96 கோவ்ருத்திக்கு நெருஞ்சியைப் புல்லாக்கி னவன் ஜகத்திதார்த்தமாக எனக்கே நல்லவருள் கள் ளென்னும்படி ஸர்வ ஸௌஹார்த்த ப்ரஸா தத்தை ஒருமடைசெய் திவரைத் தன்னுக்க லோக மாகத் தம்மைப்போலே யாக்கும்படியானூர்.

97 அதாவது மயர்வற மதிநலமருளுகை.

98 இருள் துயக்கு மயக்கு மறப்பென்கிற அனுதய ஸம்ஸய விபர்யய விஸ்ம்ருதிகளற்று மலர்மிசை யென்கிற ஜ்ஞானத்தைக் காதலன்பு வேட்கையவாவென்னும் ஸங்ககாமா நுராக ஸ்நே ஹாத்யவஸ்தா நாமங்களோடே பரமபக்தி தசை யாக்குகை

99 ஜந்மாந்தர ஸஹஸ்ர நற்றவங்களாலே க்யாத குலங்களிலே பிறந்து எழுதிவாசித்துத் தத்வஜ்ஞராய்க் குளித்தோதி உருவெண்ணு மந்தி ஐவேள்வி அறுதொழில்களால் மிக்கு ஊன்வாடப் பொருப்பிடைத் தாம் வருந்தித் துன்பவினைகளை விடுத்து விவேகசமாதிகள் வளர எட்டு நீக்கி யெட்டுமிட்டு எட்டினு யபேதப்பூவில் சாந்தொடு தேவகாரியஞ்செய்து உள்ளந்துயராய் வாரிப் புன் புலவகத்தினுளிளைப்பினை யடைவே விளக்கினைக் கண்டு யோகநீதி நண்ணி யறந்திகழுமறையோர் மனந்தன்னுள் அமர்ந்துறையும் அரும்பெருஞ் சுடரைக் கண்கள் சிவந்திற்படியே மனவுட் கொண்டு நிரந்தரம் மறவாமை துடக்கரு ஸ்ம்ருதி யாய்க் கனவில் மிக்க தர்சந ஸமமாய் ஆகத்துப் புல்கு மத்யர்த்த ப்ரியமாய் வைகுஞ் சிறப்புவிட்டுக்

குற்றேவலென்னுத அநந்யப்ரயோஜநமாய் வேத னுபாஸந ஸேவாத்யா நாதிகளென்று சொல்லு மது ஸாத்ய ஸாதந பக்தியாக ஶாஸ்த்ரஸித்தம்.

100 ஸ்வீக்ருத ஸித்த ஸாதநர் இத்தை ஸாத்யமாக இரக்க ப்ராப்திக்கு முன்னே ஸித் திக்கும்.

101 இது உபயமுமன்றிக்கே யறியாக்கா லத்தே ஒக்கப் பிறந்து தழுவிநின்று கட்டமே நோயாயுலர்த்தி வீழ்ந்தலர்ப்பாய் த்யாகஸ்வீகார நிஷ்டாஹாநிகளாக்கி ஸத்தாபோக வ்ருத்யுபக ரண மாவதொன்று.

102 இடகிலேன் நோன்பறிகிலேன் கிற்பன் கீழ்நாள்க ளென்கையாலே ஸாதநத்ரய பூர்வாப் யாஸஜமல்ல.

103 இப்பிறப்பே சிலநாளிலென்றபோதே யிரண்டுங் கழியும்.

104 பெரும்பாழியில் க்ஷேத்ரஜ்ஞன் பெருஞ் செய் கலியாரேவ ஆளும் வன்குறும்பர் குடியேறி பெருங்குடியுந் தங்கள் கருத்துள்ளேயாக்கிப் படிந் துண்ணும் போகத்தே தூராதே பொறுக்கொணுப் போகத்துக்குக் காவல்செய்து குமைத்துத் திரித்து வீழ்த்தி வலித்தெற்றி அருவி யறுத்துக் கடனுயின இறுப்பிக்கப் பாழ்த்த விதியானவாறே தன்பால் மனம் வைப்பிப்பதாகத் தேய்ந்தறமன்னி ஒள்வா ளுருவி வினைத்தூற்றை வேரறுவித்துத் தீக் கொளீஇ கவ்வை யெருவிட்டு அமுதவாறு தலைப்

பற்றி ஈரியாய்க் கசிந்ததிலே யீரநெல் வித்தியெழு நாற்றுக்களையும் வேர்முதல் மாய்த்துப் பட்டிச் சேவதக்கி மீதுகொள்ளாமல் குறிக்கொள்வித்து கடல்புரைய விளைந்து தலைவணக்கினவாறே நாளு நாள் கோட்குறையாக நின்றுஅறியாமல் குந்தங் கொண்டு ஆராமையுண்டு காலக்கழிவாலே நிலத் துக்காமல்பற்றறுத்துத் தண்டாலடித்துப் பதராறுத் துப் போர்த்த தோல்விடுத்து ஸூக்ஷ்மவொட்டும் நீரிலே கழுவி வேறோர் கலத்திட்டுப் பைந்தொடி மடந்தையரைக்கொண்டு ஷட்குண ரஸாந்நமாக்கி வானோர்க்கு ஆராவமுதானவாறே முற்றமுண்ண முன்னம் பாரித்து உழுவதோர் நாஞ்சில் கொண்டு பெருகமுயலும் பத்தி யுழவன் க்ருஷிபலமிறே.

105 கோஸல கோகுல சராசரஞ் செய்யும் குணமொன்றின்றியே அற்புதமென்னக் கண் டோம்.

106 பட்டத்துக்குரிய யானையுமரசும் செய்யு மவை ஆராயாது.

107 முந்நீர் வாழ்ந்தார் சூட்டுங் கோவை யாழியென்கிற ஸாக்ஷாத்க்ருத ஸ்வபர வ்ருத்தாந் தர்க்கு யாத்ருச்சிகாதிகளுண்டாகில் தோன்றும்.

108 செய்தநன்றி தேடிக்காணாதே கெடுத்தாய் தந்தாயென்ற அத்வேஷாபி முக்யங்களும் ஸத்கர் மத்தாலல்ல.

109 எண்ணிலும் வருங் கணனைக்கு எண் டானுமில்லை.

110 மதியாலிசைந்தோமென்னும் அனும தீச்சைகள் இருத்துவமென்னுத வென்னை இசை வித்த வென்னிசைவினது.

111 மாதவன் மலை நீர் நிழலென்று ஏறிடுமது வ்யாவ்ருத்யுக்தி அந்யார்த்தம் அபுத்திபூர்வகம் அவிஹிதம் பலவிஸத்ருஶம் பலாந்தரஹேது.

112 இவன் நடுவே யடியானென்று ஓலைப் படா ப்ரமாணம் பக்ஷபாதிஸாக்ஷி வன்களவிலனு பவமாகிற இந்திரஞாலங்கள் காட்டிக்கொள்ளக் காப்பாரற்று விதிசூழ்ந்தது.

113 வாவாறில்லை வெறிதே யென்றறுதி யிட்டபின் வாழ்முதலென்கிற ஸூக்ருத மொழியக் கற்பிக்கலாவதில்லை.

114 நலமருளினன் என்கொலென்று ஆமூல சூடம் அருளால் மன்னுமவர்க்கு " அன்புக்கடி யானதுவே அடிசேருகைக்கு ஸாதநம்.

115 புணர்தொறுமென்னக் கலந்து பிரிந்து ஜ்ஞாநபக்திகளை வளர்த்தது கனங்குழை யிடக் காதுபெருக்குதலும் மாஸோபவாஸி போஜனப் புறப்பூச்சும் போலே ஆற்ற நல்ல மாபோகச்சிரம மாக.

116 இவற்றுல் வரும் ஸம்ஶ்லேஷ விஶ்லே ஷங்களாகிறன எளியனுய் நிற்குமரியனுய் எய்தா னென்கிற தர்ஶன ஸமமான மாநஸாநு ஸந்தாந மும் திண்கொள்ளப்பெருத மநச்சைதில்யமும்.

117 புண்ணியம் பாவம் புணர்ச்சி பிரிவை அவை சரித்தவர்க்கு ப்ரியஹிதபரன் தான் துளக்கற வெங்குந் தழைக்க நடத்தும்.

118 ஜ்ஞானத்தில் தம்பேச்சு; ப்ரேமத்தில் பெண்பேச்சு.

119 தேறுங் கலங்கியென்றுந் தேறியுந் தேருதும் ஸ்வரூபங் குலையாது.

120 அடியோம் தொடர்ந்து குற்றேவல் அடிச்சியோ மடிக்கீழ்க் குற்றேவலாகை அவஸ்தாந்தரம்.

121 வித்யை தாயாகப்பெற்று பாலுமமுதுமான திருநாமத்தாலே திருமகள்போல வளர்த்த தஞ்சமாகிய தந்தை மற்றெருவர்க்குப் பேச்சுப்படாமல் விஸ்வபதி லோகபர்த்தாவென்னும் மணவாளரை நாலிரண்டிழைகொண்டு முப்புரியான ப்ரம்ஹமஸூத்ர பந்தத்தோடே வரிப்பிக்க, பரம்புருடன் கைக்கொண்டபின் சதுர்த்தியுள் புக்கு இடையீடு நடுக்கிடக்கும் நாள்கழித்து ஜந்மபூமியை விட்டகன்று சூழ்விசும்பிற்படியே உடன்சென்று குடைந்து நீராடி வியன்துழாய் அஞ்சனத்தின் நீறு நானப்பொடி பீதகவாடை பல்கலன் கொண்டு நோக்கி யலங்கரித்துப் பல்லாண்டிசைத்துக் கவரிசெய்ய நிறைகுட விளக்கமேந்தி யிளமங்கைய ரெதிர்கொள்ள வைகுந்தம் புக்கிருந்து வாய்மடுத்துப் பெருங்களிச்சியாக வானவர்போகமுண்டு கோப்புடைய கோட்டுக்கால் கட்டில் மிதித்து ஆரோஹித்து பரதாக்ரூர மாருதிகளை பரிஷ்வங்கித்த மணிமிகு மார்பிலே குருமாமணியா

யணையும் வஸ்துவுக்கு மணிவல்லிப் பேச்சுவந் தேறியன்று.

122 இன்புமன்பும் முற்படுவது கொழுந்து விடுவதாகிறது கடிமாமலர்ப் பாவையோடுள்ள ஸாம்ய ஷட்கத்தாலே.

123 உண்ணுது கிடந்தோர் மாயையினுலென்னும் வீறுடைய முடிக்குரியாரோடு இத்திருமண்ணேரன்ன வொண்ணுதல் பின்னைகொ லென்கிற வொப்பு, தென்பால் நெடுமாடங் கடுஞ்சிலை அம்பெரியூட்டி நீரெழவெரித்தப் பெருந்தோற்றத் தாருயிர்காகுத்தன் ஆதியங்காலம் மண்புரை பொன்மாதின் துகளாடி எருதேழ்தழீஇச் சறை யினுரென்னு மவற்றிலே தோன்றும்.

124 இவர்கள் தேடிநிற்கப் பொய்கை முது மணல் முல்லைப்பந்தல் முற்றம் மச்சொடு மாளிகை யவ்வவிடம்புக்கு வாரிச் சிதைத்துப் பறித்துக் கிழித்துக் கோயின்மை குரும்புசெய்து அல்லல் விளைத்துக் கவரு முகக்கு நல்லவர் முழுஸி ஆவ ரென்றும் தென்மொழிகளாலே கோகுலத்தை மறப் பிக்கும் நகரஸ்திரீகள், நரகனைத் தொலைத்துக் கவர்ந்த பதினுறு பல்லாயிர மெண்ணிறந்தார் பாவங் கடல்ஞாலம் மின்னிடை மல்லிகை வேய் மரு பேய்முலை முனிந்து மற்பொரு விறற்கஞ் சனை மங்கநூற்ற வாயுந் தீர்ப்பாரென்னு மவற் றிலே தோன்றும்.

125 இராவெனில் நசவாகக்குழைத்தவன் பின் தொடரவிருந்த வன்சிறையிலும் விதிதன் புணை யென்று ஜீவிதாதிகளாற் குரைவின்றி மாயும்வகை

விஷஶஸ்த்ரங்கள் தேடிவில்வல வாஹாவென்று இரக்கமெழாக் கொடுமைகள் சங்கித்து என்னையும் ஜீவந்தீமென்று ஆள்விட்டுச் சுடரையடைந்து அகலகில்லா முற்றுவமை பெருமகளோடே.

126 பிரிவிலேனுக்கு இளங்கோவும் அக் குளத்தில் மீனிறே.

127 அழுந்தொழும் ஸ்நேஹ பாஷ்பாஞ்சலி யோடே ருசிரஸானுக்களில் கூவிக்கொள்ளும் பிரியாவடிமைக்குச் சரணே சரணென்று வாளும் வில்லுங்கொண்டு பந்துவும் பிதாவுமவரே யென் கையும், அன்னையென் செய்யிலென் ராஜ்யமும் யானேயென்று பெருஞ்செல்வமு மிச்சியாமல் வேண்டிச்சென்று திருவடியே சுமந்து விரைந்து வருமளவுங் கண்ணநீர் பங்கமாக நிலந்துழாவி குடிக்கிடந்த கையறவும், கோதிலடிமையுறுமோ வென்பித்த புலன்கொள் நித்யஶத்ரு விசிந்தநமு மான ப்ராதாக்கள், அப்பொழுதைக் கப்பொழுது போனுயென்றும் மாதாபிதாக்கள், செந்தீத்தண் காற்று இளநாகம் முதலான பகையறச்சிந்தை செய்து எங்குமுளனென்னும் பள்ளிப்பிள்ளை முற்றவிட்டு மற்றிலேனென்றும் தர்மாத்மா, வாளி பொழிந்த நிற்குண விஶ்வாத்மா வுள்ளேயுறைய வூணுக வீரசரிதம் கர்ப்பார் பாவம் மற்றிலேனென் றும் ராமதாஸன், பல்வகையுங்கண்டு வெண்ஶங் கேந்தின ரூபபரனுன ஶ்வேதன் முதலானேர் படி களுங் காணலாம்.

128 குழலில் நெஞ்சும் அருகலில் சுவையு மான விவர் அவர்களளவல்லர்.

129 எற்றைக்குமென்றது தோன்றப் பிறந்து ஒப்பித்து வீசி காப்பிட்டு காட்டுக்கு முற்பட்டு தர்மஞ் சொல்லிக் கேட்டு சிஷ்யதாஸீபக்ஷைக ளாய்ப்பாடி வருடி யின்றுவந் தென்பாரையுஞ் சென்று ஹூரும் நிவாஸதாஸ பேதங் கொள் வாரையும் தானவனுகப் பாவிப்பர்.

130 எழுவதோருரு அழிக்கச் செய்கிற வழு விலாவடிமைக்குப் பாஞ்சாலி படுத்துமதும் கௌ ஸல்யானு வ்ருத்தியு மொய்ப்பாக்குகை பரிசு.

131 பெருக்காறு பலதலைத்துக் கடலை நோக்கு மாப்போலே நெக்கொசிந்து கரைந்தலைந்திடிந்து உடையப் பெருகுகாதல் கடலிடங்கொண்ட கடலை பஹுமுகமாக அவகாஹிக்கும்.

132 அச்சேத்யமென்றுமதும் ஈரும் வேம் ஈரியா யுலர்த்த வென்னப்பட, சித்தம்சிற்றுய் அல்லேனென்று நீங்க கரணங்கள். முடியானே யிலவையாக, வுடல மாத்மதர்மங்கொள்ள, காத் துங் கழியுங் கட்டி அழக்கொண்ட பெருங்காத லுக்குப் பத்திமை நூல் வரம்பில்லையே.

133 ஸம்பந்தோபாய பலங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்தைகளுக்கு தோழி தாயார் மகளென்றுபேர்.

134 ஸகி வெறிவிலக்கி ஆசையறுத்து அறத் தொடு நின்ற மூன்றில் அநந்யார்ஹத்வமும், வாடி மெலிந்து பித்தேறி ஏறப்பேசிக் கட்டிழந்த கன்று ஸார்வதே வலித்தமை ஸூதநமாமோவென்று மாதா அஞ்சி முறைப்பட்டு முறையிடுகிற ஏழில்

அத்யவஸாயமும், புத்ரி பலகாலாள்விட்டு ஆற்ருமை சொல்லிக் கவராதவை விட்டு இரைக்க மடலெடுத்துக் கண்புதையப் போக்கற்று உரு நெஞ்சுள்ளெழக் கூடுநாள்தேடி தாழ்த்ததுக்கூடி உசாத்துணையற்றுச் சூழவும் பகைமுகஞ் செய்யத் தடைநில்லாதே புயக்கற்று மாலையுங் காலையும் பூசலிடுகிற பதினேழில் த்வரையும் தெரியும்.

135 தோழிமாரன்னையரென்கிற பன்மை ரக்ஷகத்வாதி பந்த வாத்ஸல்யாதி வ்யவஸாய புத்தி பேதத்தாலே.

136 அபிலாஷா சிந்தநாநு ஸ்ம்ருதிச்சாருசி பரபரமபக்திகளிலே பேதை முதலான பருவங் கொள்ளும்.

137 மயில் பிறை வில் அம்பு முத்து பவளஞ் செப்புமின் தேரன்னம் தெய்வ வுருவு விகாஸ சுத்தி தாந்தி ஜ்ஞானந்தானுராக பக்த்யனுத்வ போக்யதா கதிகளையுடைய அகமேனியின் வகுப்பு.

138 சூட்சி யகற்றி நீரென்னும் பழி இணைக்கி யெங்ஙனே யென்னும் மேலெழுத்து முன்னின்ரு யிவளை நீரென்று மிருபடை மெய்க் காட்டும், நீரென்னே யென்னு முடன்பாடு, இடையில்லையென்று உதறுதல், இருந்திருந்து நடந்தாளென்னுங் கொண்டாட்டம், அவஸ்தாத்ரய வ்ருத்தி.

139 தாயாரேதலர் உற்றீர்களென்றும் ஸாத்ய ஸித்தஸாதந நிஷ்டரை; மகள் நம்முடையேதலர் யாமுடைத்துணையென்னும் ஸித்தஸாதந ஸாத்ய பரரை.

140 நாலயலார் அயற்சேரியார் உபாய சதுஷ்டயாந்தர்யா மித்வபரர்.

141 கீழை மேலை வடக்கிலவை புறம்பாகத் தன்பற்றுள்ளசல்.

142 ஊரார் நாட்டார் உலகர் கேவலர் ஐஸ்வர்யகாமஸ்வதந்த்ரர்.

143 இறுக விறப்புக்கும் இறந்தால் தங்குமூரொக்குமே.

144 சிறு சேரார்சுளகுகள் உபயவிவேக பரிகரம்;

145 மாலை கங்குல் காலை பகல் ரஜஸ் தமஸ் ஸத்வ ஶுத்த ஸத்வ ஜ்ஞாநங்கள்.

146 நிலாமுற்றம் ப்ரஜ்ஞா ப்ராஸாத மென்னு மெல்லை நிலம்.

147 கலைவளை அஹம் மமக்ருதிகள்.

148 பட்டஞ் சூடகமாவன பராவரகுருக்கள் பூட்டுமாத்ம பூஷணங்கள்.

149 பந்து கழல் பாவை குழமணன் யாழ் தென்றல் மதிய மடிசில் சாந்தம் பூணகில் சிற்றில் தூதை முதலாவன குணத்ரய விசித்ர கர்மஸூத்ரத்தாலே கட்டி லீலையாக ப்ரேரிக்க விழுந்தெழுந்தும் சுழன்றுழன்றும் பரிபட்டும் அற்பசாரமாமவையுமாய் மதீயமென்னில் விட்டகலவும் ததீயமென்னில் இகழ்வரவும் முனிவது மிக்கால் மீதோவென்னப்படும் பொங்கைம்புலனில் போக்யாதி ஸமூஹம்.

த்விதீயப்ரகரணம் ஸம்பூர்ணம்

அழகிய மணவாளநாயனார் திருவடிகளே சரணம்.

த்ருதீயப்ரகரணம்.

150 சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞாநகர் மங்களைச் சிறகென்று குருஸப்ரம்ஹசாரி புத்ர சிஷ்யஸ்தாநே பேசும்.

151 விவேகமுகராய் நாலுரைத்து அள்ள லில் ரதியின்றி யணங்கின் நடையைப் பின்சென்று குடை நிழலிலே கவரியசைய சங்கமவைமுரல வரிவண்டிசைபாட மாநஸ பத்மாஸநத்திலே யிருந்து விதியினு லிடரி லந்தரமின்றி இன்பம் படக் குடிச்சீர்மையிலேயாதல் பற்றற்ற பரமஹம்ஸ ராவுதலான நயாசலன் மெய்ந்நாவன் நாதயாமுநர் போல்வாரை யன்னமென்னும்.

152 என்பெறுதீயென்ன ப்ரமியாதுள்ளத்து ளூறிய மதுவ்ரதமாய்த் தூமது வாய்கள்கொண்டு குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்ரஹித்துத் தேதென வென்று ஆளம் வைத்துச் சிறுகாலெல் லியம்போது குறிஞ்சி மருள் காமரங் கந்தாரந் தலைக்கொள்ளப்பாடித் துன்னிட்டு நெருக்க நீக் கென்று கடந்து புகுந்து தகையறப்புக்கு வண் டொத்திருண்ட குழலிலே சங்கையற மருவி யரு ளாத யாமென்றேடிவந்து வாசமேயூதி வண்டே கரியான தெய்வவண்டோடே சேர்விக்கும் சேம முடை நாரதன் முனிவாஹநர் தம்பிரான் மார் போல்வாரை வண்டு தும்பியென்றும்.

153 கண்வலைப்படாதே அகவலைப்பட்டு வளர்த் தெடுப்பார் கையிருந்து தயிர் நெய்யமர் பாலமு

துண்டு ஒருமிடராய் போற்றி யொருவண்ணந் திருந்த நுவலாததுக்கு என்பிழைக்கும் நீயலையே நல்வளந்துரப்பனென்னு மவற்றுக்கு முகந்து சொல்லெடுத்துச் சேர்ந்தவாறே கற்பியா வைத்தமாற்றம் கைகூப்பி வணங்கப்பாடி ஆலியா வழையா பராபிமாநத்திலே யொதுங்கின நம்பிக்கன்பர் தலை மீதடிப்பொடி உடையவருடையார் போல்வாரைக் கிளிபூவை குயில் மயிலென்னும்.

154 ஆசறு தூவியென்றும் பாஹ்யாப்யந்தர ஸூத்தியோடே திரியுகளும் வ்யஸநவ்யதையற்று தாய்வாயிலுண்ணும் பிள்ளைக் கிரைதேடி வைகலுடன் மேய்ந்து நும்கால் பைங்கானமென்று ப்ரம்ஹரதம் பண்ணிக் கொடுத்தவை கொண்டு நல்ல பதத்தையும் வேண்டேனென்னுந் தனிப்பெரும்பித்தர் நம்முதலிகள் போல்வாரை நாரை கொக்கு குருகென்னும்.

155 பூண்டநாள் சீர்க்கடலையுட்கொண்டு திருமேனி நன்னிறமொத்து உயிரளிப்பான் தீர்த்தகராய் எங்கும் திரிந்து ஜ்ஞாநஹ்ருதத்தைப் பூரித்து தீங்கின்றிவாழ நிதிசொரிந்து கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து வெளுத்தொளித்துக் கண்டுகந்து பரஸம்ருத்தியேபேருன அன்புகூருமடியவருறையி லிடாதவர் ப்யற்கை யருள்மாரி குணந்திகழ்கொண்டல் போல்வாரை மேகமென்றும்.

156 நம்பிழையுஞ் சிறந்த செல்வமும் படைத்த பரப்புந் தமரோட்டை வாஸமு மறப்பித்த

க்ஷமா தீக்ஷா ஸாரஸ்ய ஸௌந்தர்யங்களை யுணர்த்தும் வ்யூஹ விபவ பரத்வ த்வயார்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்.

157 பகலோலக்க மிருந்து கருப்புடுத்துச் சோதித்துக் கார்யம் மந்த்ரித்து வேட்டையாடி யாராமங்களிலே விளையாடும் ராஜநீதி யாதுஞ் சோராமல் செங்கோல் நடாவுகிற பாரளந்தவென்னும் மூன்று முடிக்குரிய விளவரசுக்கு விண்மீதென்கிற ஐந்திலுங் காணலாம்.

158 தமருகந்த அடியோமுக்கேயென்னும் பின்னானார் வணங்கு மிடத்திலே யெல்லாம் பூர்ணம்.

159 வன்பெருவானக முதலுய்ய இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி வடிவுடை கூடலிடங் கட்கிலீயென்னு மவற்றில் இவள்திறத் தென்கொலோ வென்பிக்கிற வ்யூஹ ஸௌஹார்த்த ப்ரதாநம்.

160 மண்ணோர் விண்ணோர் வெற்பில் போகின்ற ஏழுலகுக் குயிர் பாஸம்வைத்த நிகரில் வாத்ஸல்ய முஜ்வலம்.

161 உபய ப்ரதாந ப்ரணவமான வுரை கோயிலி லெத்தேவுமென்னும் பரேஸத்வம் பொலியும்.

162 வைஷ்ணவ வாமநத்தில் நிறைந்த நீல மேனியின் ருசிஜநக விபவலாவண்யம் பூர்ணம்.

163 ருசிவிவசர்க்குப் பாதமோரணுக்கு மௌதார்யம் வானமாமலையிலே கொழுந்துவிடும்.

164 களைகணற்ருரை யுருக்கும் மாதுர்யங் குடமூக்கிலே ப்ரவஹிக்கும்.

165 மெலிவிலுஞ் சேமங்கொள்விக்கும் க்ருபை தென்னகரியிலே நித்யம்.

166 வ்யவஸாயஜ்ஞர் ரக்ஷணஸ்தைர்யம் பம்போத்தர தேஸஸ்தம்.

167 விளம்ப விரோத மழிக்கும் விருத்தகடநா ஸாமர்த்யம் நன்னகரிலே விஸ்தீர்ணம்.

168 கடித கடக விகடநாபாந்த்வம் அவ்வூரிலே த்விகுணம்.

169 கைம்முதலிழந்தா ருண்ணும் நிதியின் ஆபத்ஸகத்வம் புகுமூரிலே ஸம்ருத்தம்.

170 சென்று சேர்வார்க்கு உசாத்துணையறுக்கும் ஸௌந்தர்யம் மாநகரிலே கோஷிக்கும்.

171 ப்ரவணசித்தம் பரத்வ விமுகமாக்கும் ஆநந்தவ்ருத்தி நீணகரிலே.

172 ஸாதரரைப் பரிசழிக்குஞ் சேஷ்டிதாச்சர்யங்குளத்தே கொடிவிடும்.

173 ஶ்ரமம் மனஞ் சூழும் ஸௌகுமார்ய ப்ரகாஶம் அச்சேரியிலே.

174 மஹாமதிகள் அச்சங் கெட்டு அமரும் சௌர்யாதிகள் சிற்ருற்றிலே கொழிக்கும்.

175 ஸாத்ய ஹ்ருதிஸ்தனும் ஸாதந மொருக்கடுக்கும் க்ருதஜ்ஞதா கந்தம் தாயப்பதி யிலே.

176 அவகாஹித்தாரை அநந்யார்ஹமாக்கும் நாயகலக்ஷணம் வளம்புகழுமூரிலே குட்டமிடும்.

177 போக்யபாகத்வரை தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்.

178 போகத்தில் தட்டுமாறுஞ் சீலங் காட் கரையிலே கரையழிக்கும்.

179 மஹாத்மாக்கள் விரஹம்ஸஹியாத மார்த் தவம் வளத்தின்களத்தே கூடுபூரிக்கும்.

180 பிரிந்த துன்பக்கடல் கடத்தும் விஷ்ணு போதாந்ரு ஶம்ஸ்யம் நாவாயிலே நிழலெழும்.

181 ஶரண்ய முகுந்தத்வம் உத்பலாவதகத் திலே ப்ரஸித்தம்.

182 மார்க்க பந்துஶைத்யம் மோஹநத்தே மடுவிடும்.

183 ஸைந்ய புத்ர சிஷ்ய ஸாத்யஸித்த பூஸுராரர்ச்சனத்துக்கு முகநாபிபாதங்கள் த்வா ரத்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அநந்தசயநத் திலே வ்யக்தம்.

184 மோக்ஷதாநத்தில் ப்ரணத பாரதந்த்ர்யம் வளம்மிக்க நதியிலே கரைபுரளும்.

185 த்யாஜ்யதேஹவ்யாமோஹம் மருள்கள் கடியும் மயல்மிகு பொழிலிலே தழைக்கும்.

186 அங்கீகரிக்க அவகாஶம் பார்க்கும் ஸ்வாமித்வம் பெருநகரிலே பேர்பெற்றது.

187 இவற்றில் ப்ராவண்யம் இவள்பரமேயென்னவுண்டாய் ஷோடஶகலா பூர்ணமான சந்த்ரமண்டலம்போலே பதினறு திருநக்ஷத்ரம் நிரம்பினவாறே தேவபோக்யமான வதில்அம்ருதம்போலன்றிக்கே யென்னுத் தமிழ ரிசைகாரர் முதற்பத்தர் வானவ ரென்னம்மான் பார்பரவென்னும்படி வேஸ்வர விபூதி யோக்யமான பாலோடமுதன்ன மென்மொழி முகஞ் செய்தது.

188 நீர் பால் நெய் யமுதாய் நிரம்பின வேரி நெளிக்குமாப்போலே பரபக்த்யாதிமய ஜ்ஞாநாம்ருதாப்தி நிமிக்கிற வாய்கரை மிடைந்து மொழி பட்டு அவாவிலந்தாதி யென்று பேர்பெற்றது.

189 மனஞ்செய் எல்லையில் ஞானவின்பத்தை நின்மலமாக வைத்தவர் ஞானப்பிரானை ஞானத்து வைம்மி னென்றவிது தத்வ விவேக நித்யத்வாநித்யத்வ நியந்த்ருத்வ ஸௌலப்ய ஸாம்யாஹங்காரேந்த்ரிய தோஷபலமந: ப்ராதாந்ய கரண நியமந ஸங்க்ருதி பேத தேவாஸுர விபாக விபூதியோக விஸ்வரூப தர்ஶந ஸாங்கபக்தி ப்ரபத்தி த்வைவித்யாதிகளாலே அன்றேதிய கீதாஸமமென்னும்.

190 அது தத்வோபதேஶம் இது தத்வதர்சி வசநம்.

191 அது ஐவரை வெல்வித்துப் பதித்தைந் திரட்டிப் படச்சொன்னது. இது நாடாகத்தோற் றேமென்று ஐயைந்து முடிப்பான் சொன்னது.

192 அங்கு நம்பிஸரணென்று தொடங்கி முடிவில் அப்ரியமென்றது. இங்கு பரமேயென்றிழிந்து பொலிகவென்றுகந்தது.

193 அதில் ஸித்ததர்மவிதி, இதில் வித்யநுஷ்டானங்கள்.

194 பகவன் ஞானவிதி பணிவகையென்று இவரங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்.

195 வேதவேத்ய வைதிகோபதேஸம் ஆவித்யரளவிலே அஜ்ஞாஜ்ஞாநிகள் ஜ்ஞாநவிஸேஷயுக்தர் ஸர்வஜ்ஞரென்னுமல் இவர் திருத்துவர்.

196 அறியாதார்க்கு உய்யப்புகுமாறும் இக்கரையேறினார்க்கு இன்பவெள்ளமும் நிலையறியாதார்க்கு ஆழங்காலுங் கரையேற்றுமவனுக்கு நாலாறு ம்றிவிக்கவேணும்.

197 அவன் முனிந்தார்க்குத் தான் கண்டது தம்மை முனிவார்க்குத் தன்கண் காணுதது காண்பார்க்குக் கண்மாறுமிடம் ராகாந்தனுக்கு மாயாதோஷம் இவர்காட்டுமவை.

198 ஸாதந ஸாத்யஸ்த மத்யஸ்தரைவிட்டு அவற்றிற் கலங்கும் ஜீவேஸ்வரர்க்கு வீடுமின் நினைமின் பிடித்தேன் விடுவேனோ வைத்தெழ ஊதிவாடி நிற்க கன்மமன்று ஆன்பின் கைகழியேல் உழித்ராய் என் சொற்களென்று இவர் பலகாலும் ஹிதாஹிதங்கள் சொல்லுவர்.

199 கதிர்ஞான மூர்த்திக்கு உணர்த்துவது ப்ரேமத்தாலே, தம்மூடுவார்க்கு வேட்கையெழுவிப்பது ஞானத்தாலே.

200 உயிர்மாய்தல் ஆழு மென்னுருயிரென்னும் பரதுக்கம் ஸஹியாமை யிரண்டிலுமுண்டு.

201 என்ன துன்னதாவியிலே அறிவாராத்மாவென்று அவன் மதம் தோன்றும்.

202 இருத்து மெண்டானுய்ப் பொய்கலவாது அன்புசெய்து பற்றிலனுய் க்ஷுத் த்ருட் பீடித நிர்த்தநரைப்போலே கண்டுகொண்டுண்டு பருகி பரிஜநாதிகளோடே தன்னைத் தந்து என்செய்வனென்றே யிருந்து அகில பரத்தையும் ஸமர்ப்பிக்க அதுசுமந்து அல்லுநன்பகலும் போகு என்றுலும் அகல்வானுமல்லனுய்ப் போகேலென்றுலும் உகப்பையுந் தவிர்ந்து விதிவகையே நடத்துமவனே உபதேஶஸத்பாத்ரம்.

203 நண்ணுதார் மெய்யில் ஊன் ஆசை நிர்வேதத்தோடே ஆஸ்திக்ய அமாநித்வாதிகள் விஞ்சின ப்ரணிபாதாபிவாதன பரிப்ரஶ்ந ஸேவாபரர்க்கு உளங்கொள் பேசுமளவென்றென்னுமர்த்தத்தை வம்மின் விரோத மீனச்சொல் லெவ்வுயிர்க்கும் அறியவென்று அடைவுகெட அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது ஞாலத்தார் பந்த புத்தியும் அநர்த்தங்கண்டு ஆற்ருண்மயும் மிக்க க்ருபையுமிறே.

204 தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடி பணிந்தவர்க்குமே இவையுள்ளது.

205 க்யாதி லாப பூஜாபேக்ஷயற மலர்நாடி ஆட்செய்ய உய்யக்கொண்டு ஆரைக்கொண்டு வாளும் வில்லுங் கொண்டென்கிற இழவுகள் தீரப்பெற்றது.

206 ப்ரும்ஹநிஷ்டரும் ஸம்வத்ஸர வாசிகளுமாகில் ஏபாவம் பயனன்றாகிலுஞ் சேராது.

207 மெய்நின்று மங்கவொட்டுக்கு நடுவு அநுபவ கர்ப்போபதேஸம்.

208 இவற்றுக்கு மந்த்ர வித்யாநுஸந்தாந ரஹஸ்யங்களோடே சேர்த்தி.

209 அளிப்பானடியேன் அடைக்கலஞ் சூடி பொய் யாதானு மழுந்தாரென்று ஸ்வரூபவிரோதி நிவ்ருத்திகளையுந் தாமரையுந்தி பெருமாமாயன் ஆளாகவே வாழியவென்று ப்ராப்யபலங்களையும் நெறிகாட்டி மனத்துக்கொண்டு கண்ணனலடித்து கண்டிலமால் யாதாகிலென்று உபாயத்தையுஞ் சொன்னவை மந்த்ர ஶ்லோகங்களோடே சேரும்.

210 த்வயார்த்தம் தீர்க்கஶரணகதியென்றது ஸாரஸங்க்ரஹத்திலே.

211 மூன்றில், சுருக்கியவைந்தையும் உயர் திண் அணை யொன்று பயிலேறு கண் கரு வீடு சொன்னல் ஒருக்கொண்ட நோற்ற நாலும் எம்மா ஒழி நெடுவேயென்கிற விருபதிலே விஶதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும் அருளினன் வீடுபெற்ற என்கையாலே ஐந்திலுமிரண்டையும் தொழுது க்ளித்தேன் சொல்லுப்பெற்றேன்

பணிசெயென்கிற முக்தலக்ஷண வ்ருத்தியாலே இரண்டிலொன்றையும் இதுக்கு ப்ரமேயமென்னும்.

212 ரஹஸ்யத்துக் கோரெழுத்தும் அதுக் கோருருவும் போலே யானவற்றிலே இமையோ ரதிபதி அடியேன்மனனே பொய் மயர்வு பிறந் தருளினன் விண்ணப்பம் தொழுதெழென்ற பஞ்ச கத்தோடே அவித்யாதி ஸ்வரூப ஸ்வபாவாத் மேஶ்வர பந்தரக்ஷண க்ரமகுண விக்ரஹ விபூதி யோக ததீயாபிமாநோபதேஶ விஷயாந்யாபதேஶ ஹேத்வாதிகளும் ஸங்க்ரஹீதம்.

213 அடிதொழுதெழென்ற விதிலே வஸ்து நிர்த்தேஶ நமஸ்காராசீஸ்ஸூக்களுமுண்டு.

214 ஶாதுஶனம் நண்ணு மயர்வற மாசறுக் கும் தெருள்கொள்ளப் பத்தராவ ரடிமையற உரிய நோய்களறுக்கு முடைந்தேற்றரும் வானின் தாளின் கீழ் அடிக்கீழ் இன்பக் கதிபயக்கும் ஊடு புக்கு மூவுலகு முருகாநிற்பரென்னும் ஸாம்யத் தாலே வாச்யன் பத்திலுய தோற்றம்போலே தோற்றங்களாயிரத்தின் பத்துப்பத்தான விதிலு விர்ப்பாவம்.

215. ஐந்திலே டொன்பதோ டொருபத் தென்னு மவைபோலே நூறே சொன்ன பத்து நூறு ஓராயிரமென்றதும் ஸாபிப்ராயம்.

216 பாட்டுக்கு க்ரியையும் பத்துக்குக் கருத்தும் போலே நூற்றுக்கு உபதேஶப்பத்து.

217 பகவத்பக்தபரங்கள் ஆஶ்ரயணவிதி ஶேஷங்கள்.

218 பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ ஶரண்யத்வ ஶக்தத்வ ஸத்ய காமத்வ ஆபத்ஸகத்வ ஆர்த்தி ஹரத்வ விசிஷ்டன் மயர்வையறுக்க தத்வவேதந மறப்பற்று ஜ்ஞப்திபலமுக்தி தலைசேர நிஷ்கர்ஷித்து மோக்ஷ பலவ்ருத்தி செய்யவர்த்தித்து புருஷார்த்தபலாந்ய ருசியொழிந்து விரக்தி பலராகங் கழியமிக்கு ப்ரேமபலோபாயத்தேபுகுந்து ஸாதநபலோபகாரக் கைம்மாறின்றி க்ருதஜ்ஞதாபலப்ரதி க்ருதமானத்தை யுணர்ந்து ஆத்மதர்ஶநபலப்ராப்தி மரணவதியாகப் பெற்று காலாஸக்தி பலகதிக்குத் துணைகூட்டின தம்பேற்றைப் பிறரறியப் பத்துதோறும் வெளியிடுகிருர்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் திருவடிகளே சரணம்

த்ருதீய ப்ரகரணம் ஸம்பூர்ணம்.

சதுர்த்த ப்ரகரணம்

219 பரபரனுய்நின்ற வளவேழ்வைப்பா மவனவையுள் உம்பர் வானவரதிபதி மயர்வற மன்னி மனம் வைக்கத் திருத்தி மறக்குமென்று நல்கி விடாதேமன்ன அயர்ப்பிலனறுத்தேன் என் சொல்லி மறப்பனே வென்னும்படி தத்வஜ்ஞரானவர் சுடரடி யெம்பிரானை விடாது கண்டாய் நீயும் நானுமென்கிற ஸஹ்ருதயா நுபவம் ஸம்

ஸாரிகளுக்குமாம்படி வீடுமினென்று த்யாஜ்யோ பாதேய தோஷகுண பரித்யாக ஸமர்ப்பண க்ர மத்தை ஸாலம்பந மந்த்ரமாக உபதேசித்து எளிதாகவவதரித்துப்பிழைகளை ஸஹித்துப் புரை யறக்கலந்து அல்பஸந்துஷ்டனாய் அம்ருதமே யௌஷதமாக்கி நீர்புரையத்தன்னை நியமித்து போகத்தை ஸாத்மிப்பித்து பக்திகணனைகளுக்கு ஒக்கவரு மவனுடைய ஸேவைக்கு எளிமையு மினிமையுமுண்டு தொழுதால் அரும் பயனாய தரும் உத்யோகத்தே வினைகளும் மாளும் அவனு ரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமற வுணர்வுகொண்டு நலஞ்செய்வதென்று தாம் மயர் வறமதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறார் முதற் பத்தில்.

320 சோராத மூவா வேர்முதலாய் உலகம் படைத்தவனென்கிற சிதசித்ரயத்ரிவித காரண மானவன் அறியாதனவறிவிக்க வுள்ளந்தேறி தூமனம் மருளிலென்னும் ஜ்ஞானபலமான வொளிக்கொண்ட மோக்ஷந்தேடிவாட வுலராமல் ஆவிசேர்ந்து சிக்கெனப்புகுந்து ஸம்பந்திகளுஞ் சேர்தல் மாறின ரென்ன வாழ்வித்து உபகரிக்கிற நீந்துங்கடலில் எம்மாவீட்டை உபயாநு குண மாக்கினவர் ஆஶ்ரயணீயனுக்கு பூர்வோக்த பரத் வத்தை ஸ்தாபிக்கிற ஸகலபலப்ரதத்வ காரணத்வ சேஷசாயித்வ ஶ்ரிய:பதித்வ ஸௌலப்யாதிகளை திண்ணனவணவதென்று வெளியிட்டு கள்வாதீர்த் தனென்றுவசநப்ரத்யக்ஷங்களுங்காட்டிப்புலனைந் தென்று ஸம்ஸார மோக்ஷ ஸாதந துக்காநந்த

ரஸம் முன்னாக விதிக்கிற அந்தர்க்கதகுணோபாஸ
நத்தை மதித்துப் பெருக்கி மூழ்கி யழுந்திக்
கீழ்மை வலஞ் சூதுஞ்செய்து இளமைகெடாமல்
செய்யும் க்ஷேத்ரவாஸ ஸங்கீர்த்தநாஞ்சலி ப்ரத
க்ஷிண கதிசிந்தநாத்யங்க யுக்தமாக்குகிறார் இரண்
டாம்பத்தில்:.

221 முழுதுமா யெங்கணு மொழிவற அரு
வாகிநின்று தோய்விலனும் ஸர்வவ்யாபகன்
தீர்ந்த வடியார்களைத் தாளிணைக் கீழ்க்கொள்ளும்
தன்படிக்கும் நீ தந்த மாமாயப்புணர்வினைப் பிறப்
பழுந்தி அலமருகின்றேன் வேரறவரிந்து எந்நா
ளெங்குவந்து தலைப்பெய்வனென்று கழித்துப்
புகுந்தும் தம்காதலுக்கும் ஸத்ருஸமாகக் கண்டு
கொள்ளென்னும் ஊனமில் மோக்ஷபலமான
முடிச்சோதியி லநுபவத்தாலே நித்யவஸ்து நீடு
பெற்று அவச்சேதமற்ற வடிமைசெய்ய வேண்டும்
படி ஸர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து சொல்லிப்
பாடி யேத்திப்பிதற்றி யெழுந்தும் பறந்தும் துள்
ளிக்குனித்துத் தடுகுட்டக் கும்பிடு நட்டமிட்டுச்
சிரிக்கக் குழைந்து நையும் ப்ரீதியுகளத்தம் மடியா
ரென்ன வுடன்கூடும் ஸாத்யம்வளரப் பைகொள்
பாம்புபோலே இந்த்ரியவ்ருத்தி நியமமறப்பாட
வந்த கவியன்றிக்கே படைத்தான் ஸ்லோகக்ருத்
தாய்க் குறைமுட்டுப் பரிவிடர் துயர் துன்பமல்லல்
துக்கந் தளர்வு கேடுகளின்றி அம்ருதானந்த மக்ந
ரானவர் செய்யதாமரைக்கண்ணன் அமரர் குல
முதலென்றஞ்சாதபடி எளிவரு மிணைவனுமென்
றவை பரத்வமாம்படி யவனுகும் ஸௌலப்ய
காஷ்டையைக்காட்டி வழியைத் தருமவன் நிற்க

இழியக்கருதுவ தென்னுவது? வேண்டிற்றெல் லாந்தரும், தன்னுகவே கொள்ளும், கவிசொல்ல வம்மினென்று முக்தைஶ்வர்யத்தை முன்னிட்டு ஶ்வவ்ருத்யை மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகி ருர் மூன்ரும்பத்தில்.

222 ஈசனேயீசன் ஈசன்பாலென்ன ஏர்கொள் வானத்தும்ஆயே யென்கிற வ்யாப்தி நிறம்பெறத் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தா ஒழிவில் காலத்துக்குச் சேர பூர்வபோகங்களே யோதுமா லெய்தின சாபலத்துக்குச்சேர ஸமகாலமாக்கிப் போதால் வணங்காமை தீர்த்தப்ரண யித்வத்திலே காதல் மையலேறிய பித்தாய் தேசதூரத்துக்குக் கூவியுங் கொள்ளாயென்றது தீரக்கண்ட சதிரை யும் ஒருநிலமாகக் காட்ட, வீவிலின்பங் கூட்டினே யென்று முக்தபோக மானஸ ப்ராப்திபலமான தேவதாந்தராத்மாத்மீய லோகயாத்ரைஶ்வர்யாக்ஷ ரங்களில் வைராக்யம் உன்னித்துமிருடம்பினுல் கொடுவுலகம் வேட்கையெல்லா மொழிந்தேனெ ன்ன வுடையரானவர் ஒரு நாயகமென்று ராஜ்ய ஸ்வர்க்காத்மாநுபவ அல்பாஸ்திரத்வ ஸாவதிகத் வாதிகளேயும் ஆடும் கள்ளிறைச்சி க்ருஞ்செஞ் சோருகிற நிந்த்யங்களாலே இளந்தெய்வத்துக்கு இழைத்தாடும் நிஹீனதையையும், பேசநின்ற தேவதாஜ்ஞாநாஶக்தி ஸாபேக்ஷத்வாதிகளேயும் இலிங்கத்து விளம்பும் பாஹ்ய குத்ருஷ்டி மத தமோநிஷ்டதையையுஞ் சொல்லி, ஓடிக் கண்டீர் கண்டுந் தெளியகில்லீர் அறிந்தோடுமினுட்செய் வதே யுறுவதாவதென்று விரக்தி பூர்வகமாக ஆஶ் ரயணத்தை ருசிப்பிக்கிருர் நாலாம்பத்தில்.

223 ஆவாவென்று தானே தன்னடியார்க்குச் செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளையுடைய வன் எவ்விடத்தானென்னும் பாவியர்க்கும் இரு கரையு மழிக்கும் க்ருபாப்ரவாஹ முடையவன் பொய்க்கூத்து வஞ்சக்களவு தவிர முற்றவும் தானு யுன்னைவிட் டென்னப்பண்ணின விரக்தி பல பரமாத்மாராகம் பேரமர் பின்னின்று கழியமிக்கு யானேயென்ன வாய்ந்தாற்ற கில்லாது நீராய் மெலிய வூடுபுக்கு வளர விஷவ்ருக்ஷபலங்கள் கைகூடினவர் அடிமைபுக்காரையு மாட்செய்வா ரையுங் காண லோகத்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர்குழாங்களைக்கண்டு காப்பிட்டு ப்ரஹ லாதவிபீஷணர் சொற்கேளாத அரக்கரசுரர் போல் வாரைத் தடவிப்பிடித்து தேசகாலதோஷம் போக வெங்குமிடங்கொண்டவர்களை மேவித் தொழுது உஜ்ஜீவியுங்கோள் நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தினவனை மேவிப்பரம்பு மவரோ டொக்கத் தொழில் யுகதோஷமில்லை யாமென்று விஷ்ணுபக்தி பரராக்கி கண்ணுக்கினி யன காட்டலாம்படியானூர் கண்ணிலே நோக்கிக் காணும் பக்திஸித்தாஞ்ஜநத்தை யிடுகிறுர் அஞ் சாம்பத்தில்.

224 என்னையும் யாவர்க்கும் சுரர்க்காயடியீர் வாழ்மினென்று கருணையாலே "ஸர்வலோக பூதேப்ய:" என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலுமாகாமல் உபாயத்வம் கல்வெட்டாக்குகிற ஶரண்யன் • அஜ்ஞாநாசக்தி யாதாத்ம்யஜ்ஞாநங்க ளளவா லன்றிக்கே யங்குற்றேனென்னுன் புணரா யென்னும்படி மெய்யமர் பக்தி பூமாபலமாகவும்

அநந்யகதித்வமுடைய தமக்குப் பாதமே சரணுக்க அவையே சேமங்கொண்டு ஏகசிந்தையராய்த் திர்யக்குக்களையிட்டு ஸ்வாபிப்ராயத்தை நிவேதித்து விளம்பரோஷ முபாயத்தாலே யழிய உருகாமல் வரித்ததும் நண்ணி வணங்கப் பலித்தவாறே ஸப்ரகாரமாக ஸக்ருத்கரணீயமென்று புராண பௌராணிகர் த்யாஜ்யாம்ஸமாக்கின சிதசித்ப்ராப்ய ப்ராபகாபாஸங்களைக் கைவலிந்து கைகழலக்கண்டும் எல்லாங்கிடக்க நினையாதகன்றும் ஆளீர் மேவீருதீரென்று ததீய ஶேஷமாக்கியும் புறத்திட்டுக் காட்டியென்று ப்ரஸங்கிக்கில் முடியும்படி விட்டுத் தந்தைதாயுண் ணுஞ்சோறு மாநிதி பூவை யாவையு மொன்றேயாக்கித் தளர்வேனே திரிவேனே குறுகாதோ முதல்வாவோ வென்னு மார்த்தியோடே த்ரிவிக்ரமனுய் குறள்கோலப் பிரானுய் அடியை மூன்றையிரந்த வன்கள்வன்கண் முகப்பே அகல்கொள் திசை வையம் விண்ணுந் தடவந்த தடந்தாமரைகளை யிணைத்தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்று சேர்ந்த வுலகத் திலகத்தே கண்டு அகலகில்லேனென்று பூர்வவாக்ய மனுஸந்தித்தவர் பிணக்கறத் தொடங்கி வேதப்புனித விருதி சொன்ன ஸாத்யோபாய ஶ்ரவண ஸஶோக ஸஜாதியர்க்குத் தந்தனன் மற்றோர்களை கணிலம் புகுந்தேனென்று ஸ்வஸித்தோபாய நிஷ்டையை உக்த்யநுஷ்டாநங்களாலே காட்டுகிறார் ஆரம்பத்தில்.

225 எண்ணிலாக் குணங்கள் பாலதுன்ப வேறவன் மாயாப்பல் யோகு செய்தி யென்னும் ஆஶ்சர்ய சக்தி யோகத்தாலே தெளிவுற்றவர்க்கே

ஏற்றரும் வைகுந்தத்தை யருளும் ப்ராபகத்வம் புற்பா எறும்பு பகைவனுக்குமாக்கவல்ல ஸர்வ சக்தி பாதம் அகலகில்லாத தம்மை யகற்றுமவற் றின் நடுவே யிருத்தக்கண்டு நலிவான் சுமடுதந்தா யோவென்று ஸாதநபலமான வாக்ரோஶத்தோடே பழியிட்டுக் கங்குலும் பகலும் அடைவற்ற வார்த் தியைக் கோயிற்றிரு வாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கித் தேற்றவொண்ணுதபடி தோற்று ஒன்றி நிற்கப்பண்ணின பலதானம் மற்றும் கற்பா ரிழவிலே சுவறிப் பழைய தனிமை கூப்பீடு தலை யெடுத்து சூழவும் பகைமுகஞ்செய்ய வெடுப்புஞ் சாய்ப்புமான க்லேஶம் நடக்க உபாயாதிகார தோஷ மொழிய மாயங்கள் செய்து வைத்த வைசித்ரியைக் கேட்க ஐச்சமாக விருத்தியுறக்கொண்ட ஸ்வபர ப்ரயோஜநத்தை யருளிச்செய்ய, என்சொல்லி யெந் நாள் பார்விண்ணீரிறப் பெதிரெதுவு மென்கிற வுபகாரஸ்ம்ருதியோடே தன்சரிதை கேள்வியா காம லின்பம் பயக்கவிருந்த நிலத்தேவர்குழுவிலே பாட்டுக்கேட்பிப்பதாக கா நகோஷ்டியையும் தேவ பிரானறிய மறந்தவர் சரமோபாய பரராணுர்க்கு நீணகரமது துணித்தான் சரணன்றி மற்றென் றில் முள்ளித்தொழுமினென்று ப்ராப்ய ஸாதநா வதியை ப்ரீதியாலே ப்ரகாசிப்பிக்கிருர் ஏழாம் பத்தில்.

226 தேவிமார் பணியா நேர்பட்ட நல்ல கோட்பாடென்னும்படி ஶக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீபரிஜநாதிகளையுடைய ஸத்யகாமன் கொண்ட வாக்வ்ருத்தியையும் மறப்பிக்கும் கலக்க மும் ஶங்கையு மச்சமும் தீரத் தலைச்சிறப்பத்தந்த

வதில் க்ருதஜ்ஞதாபலப்ரத்யுபகாரமாக வேந்தர் தலைவன் கந்யகாதானம்போலே ஆரத்தழுவி யற விலைசெய்த ஆத்மலாபத்தாலே அதீவ விளங்கிப் பணைத்து ஜந்மபாஸம் விட்டு ஆத்வாரமாளுமாளா ரென்று பரிந்து அநுரூபனோடே அமர்ந்து பிரிவில் க்ருபணதஸையாகத்துவரும் ஸீதாகுணங்களாலே ப்ரீதி வர்த்தித்து தித்திக்க வுள்ளே யுறைந்து கண்டுகொண்டிருந்து அமாநுஷ போகமாக்கினவன் மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவலிடாமல் சிறியேனென்றதின் பெருமையைக்காட்ட தேஹாதிகளில் பரமாய் நின்று நினைக்கில் லக்ஷ்மீ துல்யமாயவர்க்கே குடிகளாய் பரதந்த்ர ஸ்வரூபத்தை யநுஸந்தித்தவர் ஸ்வ ஸாதந ஸாத்யஸ்தர் இருகரையராகாமல் மண்ணவரும் வானவரும் நண்ணுமதத்தையே குறிக்கொண்மினுள்ளத்தென்று ப்ராப்யைக பராக்குகிருர் எட்டாம்பத்தில்.

227 எண்டிசையு மகல்ஞாலம் எங்குமளிக்கிற ஆலின்மேலென்னும்படி நித்யபோக பாத லீலோ பகரணத்தின் லயாதிகளைப் போக்கு மாபத்ஸகன் ஆருயிரென்னப் படுத்தின ஆத்மதர்ஸந பலாநுபவ பரம்பரையைக் கூவுதல் வருதலென்று முடுக விட்டு ஏகமெண்ணிக் காணக்கருதியெழ நண்ணி நினைதொறு முருகி யலற்றிக்கவையில் மனமின்றி பதினலாண்டு பத்துமாஸம் ஒருபகல் பொறுத்தவர்கள் ஒருமாஸதிந ஸந்த்யையில் படுமது க்ஷணத்திலேயாகவிரங்குகிற த்வரைக்கூடாக இனிப் பத்திலொன்று தசமதசையிலே பேழென்று நாட்கடலாகத் தம்பிக்கிட்ட தாகாமல் நாளைவதுவை

போலே நாளிடப்பெற்றவர் இம்மடவுலகர் கண்ட தோடு பட்ட அபாந்தவாரக்ஷகா போக்யா ஸூகா நுபாய ப்ரதிஸம்பந்தியைக்காட்டி மற்ருென்று கண்ண னல்லாலென்கிற வைகல்வாழ் முதலான ஸித்தோபாயம் அதில் துர்ப்பல புத்திகளுக்கு மாலே நண்ணி காலே மாலே விண்டு தேனேவாடா மலரிட் டன்பராம் ஸாங்கபக்தி அதில் அசக்தர்க் குத் தாளடையும் ப்ரபத்தி அதி லசக்தர்க்கு உச் சாரணமாத்ரம் ஸர்வோபாய சூந்யர்க்கு இப்பத் தும் பாடியிடும் தெண்டனென்று கீதாசார்யனேப் போலே அதிகாராநுகுணம் நெறியெல்லா முரை க்கிருர் ஒன்பதாம்பத்தில்.

228 சுரிகுழல் அஞ்சனப் புனல் மை நின்ற பொல்லாப்புனல் காயாவென்னு மாபத்திற்கொள் ளும் காமரூபகந்தரூபத்தாலே ப்ரபந்நார்த்தி ஹர ஞனவன் அருள்பெறும்போ தணுகவிட்ட துக்கு பலமான வானேறுங் கதிக்கு அண்ட மூவுலகும் முன்னேடிக் கால் விழுந்திடத்தே நிழற்றடங்க ளாக்கி அமுதமளித்த தயரதன்பெற்ற கோவல ஞகையாலே வேடன் வேடுவிச்சி பக்ஷி குரங்கு சரா சர மிடைச்சி இடையர் தயிர்த்தாழி கூனி மாலாகா ரர் பிணவிருந்து வேண்டடிசி லிட்டவர் அவன் மக னவன்தம்பி ஆனே யரவம் மறையாளன் பெற்ற மைந்தனுகிற பதினெட்டு நாடன் பெருங் கூட்டு நடத்துமாப்தனே வழித்துணையாக்கி அறி யச்சொன்ன ஸுப்ரபாதத்தைத் துணைபிரியாமல் போக்கொழித்து மீள்கின்றதில்லை யென்று நிச் சித்திருந்தவர் ஸஞ்சிதங்காட்டும் தசையானவாறே முந்துற்ற நெஞ்சுக்கும் பணிமறவாது மருளொழி

நகுகை விடேலென்று க்ருத்யாக்ருத்யங்களை விதித்து நெஞ்சுபோல்வாரைத் தொண்டீரென் றழைத்து வலஞ்செய்து எண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுதுமினென்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் ஸ்ரோதவ் யம் த்ரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யம் எல்லாம் வெளியிட்டு பிணக்கறவைச் சார்வாக நிகமித்து எண்பெருக்கிலெண்ணும் திருநாமத்தின் ஸப்தார்த் தங்களைச் சுருக்கி மாதவனென்று த்வயமாக்கி கர ணத்ரய ப்ரயோக வ்ருத்தி ஸம்ஹாரிகளுக்குக் கையோலை செய்துகொடுத்துச் செஞ்சொற்கவி களுக்குக் கள்ளவழி காவலிட்டு மனந்திருத்தி வீடு திருத்தப்போய் நாடுதிருந்தினவாறே வந்து விண்ணுலகந்தர விரைந்து அத்தை மறந்து குடிகொண்டு தாம் புறப்பட்ட வரக்கையிலே புக்கு தானநகர்களை யதிலே வகுத்து குரவை துவரைகளில் வடிவுகொண்ட சபலனுக்கு தேஹ தோஷமறிவித்து மாயையைமடிவித்து வானே தரக்கருதி கருத்தின்கண் பெரியனுனவனை இன்று அஹேதுகமாக வாதரித்த நீ அநாத்யநாதர ஹேதுவைச்சொல்லென்று மடியைப்பிடிக்க இந்த் ரியகிங்கரராய்க் குழிதூர்த்துச் சுவைத் தஹன்றீர் என்னில் அவையாவரை மகற்ற நீ வைத்தவை யென்பர் அது தேஹயோகத்தாலே யென்னில் அந் நாள் நீதந்த சுமடென்பர், முன்செய்த முழுவினை யாலே யென்னில் அது துயரமேயுற்ற இருவினை யுன் கோபமு மருளுமென்பர், ஈவிலாத மதியிலே னென்றும் உம்மதன்றோ கர்த்ருத்வ போக்த்ருத் வங்களென்னில் ஆங்காரமாய்ப்புக்குச் செய்கைப்

பயனுண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தாவென்பர், யானே யெஞ்ஞான்று மென்றத்தாலே யென்னில் அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத் துள்ளம் பேதஞ்செய்கை உன்தொழிலென் பர் ஜீவப்ரக்ருதி சைதந்யம் நீங்கும் வ்ரதஹேது, அகமேனியிலமுக்கறுக்கை யபிமாநக்ருத்யம், தான் நல்கும் ஸம்பந்தம் நிருபாதிகம் ஸௌஹார்த்தம் எஞ்ஞான்றும் நிற்கும், பிணக்கிப் பேதியாத ஜ்ஞா நாதி வைகல்ய மில்லை, ஏகமூர்த்தியிலல்லல்மாய் த்த யத்னபலித்வங்கள் நம்மது நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரரென்று அவனே யறிந்தனமே என்றும் ஸர்வஜ்ஞரிவர், நெறிகாட்டியருகுஞ்சுவடும்போலே யிதுவும் நிருத்தரமென்று கவிழ்ந்துநிற்க, அமந் த்ரஜ்ஞோத்ஸவ கோஷம்போலே யேறப்பெறுகிற வெழுச்சியை ஸூசிப்பிக்கிற மேகஸமுத்ர பேரீ கீத காஹள ஶங்காசீஸ்துதிகோலாஹலஞ் செவிப் பட்டவாறே ஸாக்ஷாத்கரித்த பரமப்ராப்திக்குத் தலை மிசையாய் வந்த தாள்களைப் பூண்டு போகாமல் தடுத்து திருவாணையிட்டுக் கூசஞ்செய்யாது செய் திப்பிழை பற்றுக்கொம்பற்ற கதிகேடு போரவிட்ட பெரும்பழி புறம்போனால் வருமிழவு உண்டிட்ட முற்றீம்பு அன்புவளர்ந்த அடியுரம், உயிருறவு முதலளவு துரக்கைகளாலே பெருவாணை அல்ல வாக்கினபோரவாக் குளப்படியாம்படி கடல்போன்ற வாதரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித் தமையை வெளியிடுகிறார் பத்தாம்பத்தில்.

229 உருமையோடே யுற்றேனுக்காதொழிந் தது நாடுதிருந்த நச்சுப்பொய்கை யாகாமைக்கு ப்ரபந்தம் தலைக்கட்ட வேர்சூடுவார் மண்பற்றுப்

போலே யென்னுமவற்றிலு மினியினியென்று இருபதின்கால் கூப்பிடுமார்த்தி அதிகாரி பூர்த்திக் கென்னுமது முக்யம்.

230 கமலக்கண்ணனென்று தொடங்கி கண்ணுள் நின்றிறுதிகண்டே னென்றபத்து முட்கண்ணாலேயாய் காண்பானவாவுத லதிலிரட்டியாகை யாலே கண்டுகளிப்பவளவும் பரஜ்ஞான கர்ப்ப பரபக்தி.

231 இருந்தமையென்றது பூர்ணபரஜ்ஞாநம்.

232 முடிந்தவவாவென்றது பரமபக்தி.

233 இவைஜ்ஞான தர்ஶந ப்ராப்த்யவஸ்தைகள்.

234. அவித்யா நிவர்த்தக ஜ்ஞாநபூர்த்தி ப்ரத பகவத்ப்ரஸாதாந்மோக்ஷ லாபமென்னில் மயர்வற வீடுபெற்ற வென்ற ப்ரபந்தைகார்த்யம்.

ஆசார்ய ஹ்ருதயம் ஸம்பூர்ணம்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

முடிவில் அனுசந்திக்க வேண்டிய தனியன்.

தந்தருள வேணுந் தவத்தோர் தவப்பயனய்
வந்த முடும்பை மணவாளா—சிந்தையினல்
நீயுரைத்த மாறன் நினைவின் பொருளனைத்தென்
வாயுரைத்து வாழும் வகை.

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1937.

ஸ்ரீவைஷ்ணவ நூல்கள்

	ரூ.	அ.	ப.
தேசிகப்ரபந்தம்	0	8	0
அஷ்டப்ரபந்தம்	1	0	0
சரமஸ்லோக பஞ்சகம்	0	1	0
முகுந்தமாலை உரை	0	10	0
உடையவர் கட்டியம்	0	1	0
முமுக்ஷுப்படி மூலம்	0	3	0
அர்த்தபஞ்சகம் மூலம்	0	3	0
உடையவர் வைபவம்	0	2	0
ஸ்ரீஜயந்தி மாலை	0	3	0
அமாவாசை தர்ப்பணம் யசுர்.	0	2	0
ஷை சாமம்	0	2	0
ஆளவந்தார் ஸ்தோத்திரம் உரை	1	0	0
அஷ்டஸ்லோகி	0	4	0
கோதா சதுஸ்லோகி	0	2	0
ஸ்ரீரங்கநாத ஸ்தோத்திரம்	0	2	0
சதுஸ்லோகி	0	2	0
யதிராஜவிம்ஸதி	0	4	0
ஆதித்யஹ்ருதயம்	0	4	0
ஸ்ரீகுணரத்ந கோசம்	0	8	0
பஜகோவிந்த ஸ்தோத்திரம்	0	3	0
தேசிகப்ரபத்தி	0	1	0
பராத்வாதி பஞ்சகஸ்துதி	0	2	0
சேஷாவதாரச் சிறப்பு	0	2	0
ஸ்தோத்ர வ்யாக்யான சோதகம்	0	3	0
லக்ஷ்மி அஷ்டோத்திரம்	0	1	0

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்
24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.